பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 8 வியாழக்கிழமை (22-05-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:177

வடக்கு - கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனரமைப்புக்கு

# இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வேண்டும் என்று புலிகள் வற்புறுத்து

## நோர்வே பிரதி அமைச்சருக்கு பாலசிங்கம் பதில் கடிதம்

கொழும்பு,மே22

**வடக்கு - கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனரமைப்புக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வேண்டும் என்று புலிகள் மீண்டும் வற்புறுத்தியிருக்கிறார்கள். அந்தக் கட்டமைப்பை ஏற்படுத்தப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்வந்தால் சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்வது பற்றியும் ஜப்பானில் நடைபெற இருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் பங்குகொள்வது பற்றியும் முடிவு செய்யத் தயாராக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.**

அனுசரணையாளர் விடர் ஹெல்கிஸனுக்கு புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதியுள்ள கடிதத்தில் பிரபாகரனின் இந்த நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் சமீபத்தில் பிரபாகரனைச் சந்தித்தபோது, சமாதானப் பேச்சுக்களில் புலிகள் தொடர்ந்து பங்குபற்றுவதற்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்த அரசு முன்வரவேண்டும் என்று பிரபாகரன் சொன்னார்.

அதையடுத்து விடர் ஹெல்கிஸன், பிரதமரைச் சந்தித்து கலந்தாலோசனை நடத்திச் சில ஆலோசனைகள் அடங்கிய கடிதங்களைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனிடம் ஒப்படைத்தார்.

அந்தக் கடிதத்துக்கான பதிலையே அன்ரன் பாலசிங்கம் இப்போது விடர் ஹெல்கிஸனுக்கு அனுப்பியிருக்கிறார்.

விடர் ஹெல்கிஸன் தெரிவித்த மாற்று ஆலோசனைகளைப் புலிகள் ஏற்றுக்கொள்ளவில்லை.

அன்ரன் பாலசிங்கத்தின் கடிதத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே, ஜப்பான் தூதுவர்களுடன் கூட்டமைப்பினர் நேற்று சந்திப்பு

### பிரதமருடனும் கலந்துரையாடினர்

கொழும்பு,மே22

தமிழ்க் கூட்டமைப்பினர் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நோர்வே தூதுவர், ஜப்பானிய தூதுவர் ஆகியோரைச் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்புக்களின் போது டோக்கியோ மாநாட்டில் புலிகளைக் கலந்துகொள்ளச் செய்வதற்கு அரசு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை தொடர்பாகவும் -

அந்த மாநாட்டில் கலந்துகொள்ள மறுப்புத் தெரிவித்து அதற்காக புலிகள் கூறி வரும் காரணங்கள் குறித்தும் கூட்டமைப்பினர் எடுத்துக்கூறினர்

நேற்றுமுன்தினம் புலிகளைச் சந்தித்து தாம் கலந்தாலோசித்த விடயங்கள் தொடர்பாகவும் கூட்டமைப்பினர் இந்தச் சந்திப்பில் எடுத்துரைத்தனர்.

சந்திப்பில் கலந்துகொண்ட எம்.பிக்கள் குழுவுக்கு இரா.சம்பந்தன் தலைமை தாங்கினார்.

(ம)

## மத்திய கல்லூரி உயர்தர மாணவன் மின் தாக்கிப் பலி!

யாழ்ப்பாணம்,மே22

கதிரையில் ஏறி நின்று, வீட்டு மின்சுற்றில் திருத்த வேலைகள் செய்துகொண்டிருந்த யாழ்.மத்திய கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன், மின்தாக்கி உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் நீர்வேலி வடக்கைச் சேர்ந்த செல்லத்துரை பரணீதரன் என்பவரே உயிரிழந்தவராவார்.

சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்திய பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு மின்தாக்கியதில் ஏற்பட்ட அதிர்ச்சி மரணம் எனத் தீர்ப்பு வழங்கினார்.

(எ-9)

## வவுனியாவிலிருந்து ஐந்து லொறிகளில் வெள்ள அகதிகளுக்கு உணவுப் பொருள்

### விடுதலைப் புலிகள் சேகரித்து அனுப்பினர்

கொழும்பு,மே22

தென்பகுதியில் வெள்ள அனர்த்தத்தில் சிக்குண்ட மக்களுக்காக தமிழீழ விடுதலைப் புலிகளால் சேகரிக்கப்பட்ட உணவுப்பொருள்கள் நேற்று வவுனியாவிலிருந்து கொழும்புக்கு ஐந்து லொறிகளில் அனுப்பப்பட்டன.

தமிழீழ விடுதலைப் புலிகளின தலைமை விடுத்த உத்தரவையடுத்து அதன் உறுப்பினர்கள் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் உலர் உணவுப் பொருள்களைச் சேகரித்தனர்.

அரிசி மற்றும் உப உணவுப் பொருள்கள் அடங்கிய ஐந்து லொறி

(14ஆம் பக்கம் பார்க்க)

## லண்டனில் பாலா பூரணசுகம்!

வன்னியில் தங்கியிருந்த சமயம் சிறுநீரகவீனமுற்ற காரணத்தால் உடனடியாக அங்கிருந்து லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்ற புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் இப்போது சுகமடைந்திருக்கிறார் என்று லண்டன் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அன்ரன் பாலசிங்கம் அவரது சிறுநீரகம் இரண்டும் அகற்றப்பட்ட நிலையில் தானமாகப் பெற்ற இரவல் சிறுநீரகத்துடனேயே வாழ்ந்து வருகின்றார்.

வன்னியில் தங்கியிருந்த சமயம் அவர் சிறுநீர் தொற்றுக்கு இலக்கானார் எனக் கூறப்படுகிறது. ஒருநாள் இரவு முழுவதும் சிறுநீர் கழிக்கமுடியாமல் அவர் அவதிப்பட்டதை அடுத்து அவரை உடனடியாக லண்டனுக்கு அனுப்பிவைக்க தலைவர் பிரபாகரன் அவசர நடவடிக்கை எடுத்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

லண்டனில் உடனடிச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட அவர் மருந்துகளை

(14ஆம் பக்கம் பார்க்க)

குண்டுவெடிப்பு, துப்பாக்கிச்சூடு!

## மட்டு. நகரில் நேற்றிரவு மூன்று அசம்பாவிதங்கள்!

### ஒருவர் பலி; ஒருவர்காயம்!!

மட்டக்களப்பு,மே22

மட்டு.நகரில் நேற்று இரவு இடம்பெற்ற மூன்று சம்பவங்களில் ஒருவர் பலியானார்; ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று இரவு 8.35 மணியளவில் மட்டு.நகரில் அந்தோனியார் வீதியில் இனம் தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டினால் இராணுவப் புலனாய்வுப்பிரிவின் முன்னாள் உறுப்பினரும் புளொட் இயக்கத்தின் முன்னாள் அங்கத்தவருமான மாஸ்ரர் எனப்படும் கு.பேரின்பம் (வயது 36) என்பவர் பலியானார். இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

இதேவேளை - நேற்றிரவு 7.30 மணியளவில் மட்டு. அரியார் வீதியில் உள்ள வீடொன்றின் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட கைக்குண்டுவீச்சில் அஜெரோம் (வயது 46)

(14ஆம் பக்கம் பார்க்க)

## இக்கட்டான சந்தர்ப்பங்களில் இந்தியா இலங்கைக்கு கைகொடுத்து உதவும்

### பிரதமரைச் சந்தித்து இந்தியத் தூதுவர் உறுதிமொழி

கொழும்பு,மே22

இலங்கையின் நலனில் இந்தியா பெரிதும் அக்கறை கொண்டுள்ளது. இக்கட்டான சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு இந்தியா கைகொடுத்து உதவும் என்று இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் நிருபம் சென், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் உறுதி அளித்துள்ளார்.

நேற்றுக்காலை இந்தியத் தூதுவர், பிரதமரை அலரி மாளிகையில் சந்தித்துப் பேசினார். சுமார் ஒருமணி நேரம் பேச்சுக்கள் நடைபெற்றன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவது தொடர்பாகவும் மற்றும் உதவிகள் பற்றியும் இரு தலைவர்களும் கலந்துரையாடினர்.

இலங்கை, இயற்கை அனர்த்தங்

(14ஆம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவு - பரந்தன் வீதியில்

## மினிபஸ்—சைக்கிள் விபத்து; தர்மபுரத்தில் இளைஞர் பலி!

### நேற்றுப் பிற்பகல் சம்பவம்

கிளிநொச்சி,மே22

முல்லைத்தீவு - பரந்தன் பிரதான வீதியில் நேற்று இடம்பெற்ற மினிபஸ் - சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார்.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் தர்மபுரம் வைத்தியசாலைச் சந்தியில் இடம்பெற்ற இந்த விபத்தில் சைக்கிளில் சென்றவர்களில் ஒருவரான, மயில்வாகபுரம், பிரபந்தனாறு விஸ்வமடுவைச் சேர்ந்த சின்னத்தம்பி குகதாசன் (வயது 19) என்ற இளைஞர் உயிரிழந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் தயாளன்(வயது 16) என்ற இளைஞர் படுகாயமடைந்தார்.

மேற்படி விபத்துக் குறித்து விஸ்வமடு காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-4)

## வெள்ள அனர்த்தம் தொடர்பாக அமைச்சரவை விரிவாக ஆராய்வு!

### ஜனாதிபதி சமுகமளிக்கவில்லை

கொழும்பு,மே22

நாட்டில் பாரிய பொருள் சேதங்களையும் உயிர்ச் சேதங்களையும் ஏற்படுத்திய இயற்கை அனர்த்தங்கள் குறித்து நேற்றைய அமைச்சரவையில் விரிவாக ஆராயப்பட்டது.

நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்திற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமுகமளிக்கவில்லை.

அதேவேளை, பிரதமரினால் அமைக்கப்பட்டுள்ள அனர்த்த முகாமைத்துவக் குழு தொடர்பான தமது கருத்துக்கள் அடங்கிய கடிதமொன்றை ஜனாதிபதி அமைச்சரவைக்கு அனுப்பிவைத்துள்ளார்.

ஜனாதிபதி அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் - பிரதமரின் அனர்த்த முகாமைத்துவக்குழு யோசனைக்கு உடன்பட்டுள்ளார் என்றும் சிரேஷ்ர அமைச்சர் ஒருவரின் தலைமையில் உபகுழு ஒன்றும் அமைக்கப்படவேண்டும் என்றும் - தமது தலைமையில் இயங்கும் குழுவுக்கு அப்பால் இந்த உபகுழுவின் நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும் என்பதே தமது கருத்தாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட மக்களை முழுமையாக மீட்டெடுக்கத் தேசத்தின் உதவியைக் கேட்பது என அமைச்சரவை நேற்றுத் தீர்மானித்தது.

இயற்கை அனர்த்தங்களால் சேதமடைந்த வீடுகளையும், கட்டடங்களையும் புனரமைக்க அரசு தமது முழுப் பலத்தையும் பயன்படுத்தும் என பிரதமர் அமைச்சர்களிடம் உறுதியளித்தார்

இரத்தினபுரியில் தொடர்ந்து மழை பெய்துவருவதாக அறிவித்ததால் பிரதேசவாசிகளுடன் தொடர்புகொள்ள முடியாதநிலை குறித்தும் அமைச்சரவை கவனம் செலுத்தியது.

இரத்தினபுரியில் அடிக்கடி நிகழும் இதுபோன்ற அனர்த்தங்களைக் குறைப்

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

சபாநாயகரின் முன் அனுமதியுடன்

# அமைச்சர் மகேஸ்வரன் நிகழ்த்திய உரை ஹன்சாட்டில் இருந்து முற்றாக நீக்கம்!

## நாடாளுமன்றில் நேற்று சம்பவம்

கொழும்பு,மே22

இந்து சமய விவகார அலுவல்கள அமைச்சர் தி.மகேஸ்வரனின் உரையை முறறாக நாடாளுமன்றப் பதிவேட்டிலி ருந்து (ஹன்சாட்) நீக்கவேண்டுமென சபை முதல்வரும் நீதி, பௌத்த சாசன அமைச்சருமான டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார நேற்று நாடாளு மன்றத்தில் சபாநாயகரிடம் வேண்டு கோள் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுக் காலை அமைச்சர் மகேஸ்வரன் அறிக் கையொன்றை விடுக்க, சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா அனுமதி யளித்தார்.

அமைச்சர் மகேஸ்வரனின் அறிக்கை, ஜே.வி.பி. நாடாளுமன்ற குழுத் தலைவர் விமல்வீரவன்ஸவின் முதல் நாள் உரைக்கு பதிலளிக்கும் வகையில் அமைந்திருந்தது.

அறிக்கையை அமைச்சர் மகேஸ் வரன் வாசித்து முடித்ததும் சபாநாய கர், 'இந்து சமய விவகார அமைச்சு தொடர்பான அறிக்கையொன்றை விடுப் பதாகக் கூறி அனுமதி பெற்றீர்கள். ஆனால், இது அமைச்சு விவகாரம் தொடர்பானதல்லவே' என்றார்.

இச்சந்தர்ப்பத்தில் குறுக்கிட்ட சபை முதல்வர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார அமைச்சரின் அறிக் கையை முற்றாக சபைப் பதிவேட்டி லிருந்து நீக்கும்படி கேட்டுக்கொண் டார்.

சபையிலிருந்த எதிர்க்கட்சி எம்.பிக்கள் குறிப்பாக ஜே.வி.பி.எம்.பிக் கள் அப்பொழுது மேசைகளில் தட்டி ஆரவாரம் செய்தனர். (எ)

# மாத்தறை தவிர்ந்த பகுதிகளில் வெள்ளம் முற்றாக வடிந்தது

தென்னிலங்கையில் மாத்தறை மாவட்டத்தைத் தவிர வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஏனைய மாவட்டங் களில் வெள்ளம் தொடர்ந்து வடிந்து வருகிறது. வெள்ளத்தாலும் மண் சரிவு களாலும் உயிரிழந்தோரின் எண் ணிக்கை 300இற்கும் மேற்பட்டதாகும் என்று சமூக சேவைகள் அமைச்சு தெரிவிக்கின்றது.

இந்த அனர்த்தங்களால் காணா மற்போனோரின் சரியான எண்ணிக்கை இதுவரை தெரியவரவில்லை. இடம் பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை இரண்டு லட்சத்தையும் தாண்டியிருப்ப தாகவும் இந்த எணணிக்கை மேலும் உயரலாம் எனவும் சமூக சேவைகள் அமைச்சர் ரவீந்திர சமரவீர தெரிவித் திருக்கின்றார்.

மாத்தறை மாவட்டத்தில் பல பகுதிகள் நேற்றும் வெள்ளத்தில் மூழ்கி யிருந்தன என்று மாவட்டச் செயல கம் தெரிவித்தது. இம்மாவட்டத்தில் 55பேர் இறந்திருக்கின்றனர் என மதிப் பிடப்பட்டிருக்கிறது. ஒரு லட்சத்துக் கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப் பட்டிருக்கின்றன.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் குடாவெல்ல கிராமத்தைத் தவிர ஏனைய சகல இடங்களிலுமிருந்து வெள்ளம் வடிந்துள்ளது.

வெள்ளம் வடிந்து வருகின்றபோதி லும, நிவாரண உதவிகள் மக்களைச் சென்றடைவதில் இன்னமும் தாமதம் இருந்து வருவதாக மாவட்டச் செயலா ளர்கள் கூறுகின்றனர்.

வெள்ளம் வடிந்து வருகையில் மேலும் மண்சரிவுகள் ஏற்படும் அபா யம் இருந்துவருகின்றது என தெரிவிக் கப்படுகிறது. மாத்தறை நகரில் நிலைமை படிப்படியாக வழமைகுத் திரும்பிக்கொண்டிருப்பதாக தகவல் கள் தெரிவிக்கின்றன. (எ)

# 13 வருடங்களின் பின்னர் 18 குடும்பங்கள் மன்னார் உப்புக்குளத்தில் மீள்குடியமர்வு

## இன்று கற்பிட்டியிலிருந்து திரும்ப ஏற்பாடுகள்

கொழும்பு,மே22

கடந்த 13 வருடங்களுக்கு முன் னர் மன்னார் மாவட்டத்திலிருந்து வெளி யேறி புத்தளம் பகுதியில் வசிக்கும் பலர், மீண்டும் சொந்த இடங்களில குடியமரும் ஏற்பாடுகளை மேற்கொண் டுள்ளனர்.

இம்மக்கள் மீளக்குடியமர்வதற்கான சகல நடவடிக்கைகளையும் வன்னி புனர்வாழ்வுக்குத் துணைபுரியும் அமைச்சர் நூர்தீன் மசூர் மேற்கொண் டுள்ளார் என்று மன்னார் மாவட்ட ஒருங்கிணைந்த அபிவிருத்தி அமைப் பின் செயலாளர் கே.எம்.ஏ.கபீர் தெரி வித்தார்.

முதற்கட்டமாக, மன்னார் உப்புக் குளத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 18 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 94 பேர் கற்பிட்டியிலிருந்து இன்று மன் னார் திரும்புவதற்கான அனைத்து ஏற் பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

இக்குடும்பங்களின் பெயர்ப்பட்டி யல் கற்பிட்டி பிரதேச செயலாளர் எம். பண்டாரவினால் புத்தளம் மாவட்ட செயலாளர் ஊடாக மன்னார் அரச அதிபர் வீவிஸ்வலிங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (வ்)

# வெள்ளம், மண்சரிவுகளால் 256பேர் பலி; 100 கோடி ரூபா சொத்துக்கள் அழிவு!

## அமைச்சர் கருஜயசூரிய நாடாளுமன்றத்தில் தகவல்

கொழும்பு,மே22

தென்பகுதியில் வெள்ளம், மண் சரிவு காரணமாக நேற்றுக் காலை 8மணிவரை 256 பேர் கொல்லப்பட்ட னர். இரத்தினபுரி மாவட்டத்திலேயே அதிகமாக 125 பேர் பலியாகியுள்ள னர். மாத்தறை மாவட்டத்தில் 95 பேரும் அம்பாந்தோட்டை, காலி, களுத் துறை ஆகிய மாவட்டங்களில் மொத் தம் 36 பேரும் கொல்லப்பட்டனர்.

எரிசக்தி, மின்சக்தி அமைச்சர் கரு ஜயசூரிய நேற்றுக் காலை நாடாளு மன்றத்தில் இந்த விவரங்களைத் தெரிவித்தார்.

வெள்ள அனர்த்தம் தொடர்பாக மேலும் தகவல் தருகையில் அவர் கூறியதாவது:-

வெள்ளம் மற்றும் மண்சரிவால் ஒரு லட்சத்து 69 ஆயிரம் குடும்பங்கள் அகதிகளாகி இருக்கின்றன. வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு உதவ வெளிநாடுகள் முன் வந்துள்ளன.

வெள்ளம், மண்சரிவால் பாதிக்கப் பட்ட சில பகுதிகளுக்கு உணவுப் பொருள்களை எடுத்துச்சென்று விநி யோகிக்க முடியாமல் இருக்கின்றது. இப்பகுதிகளுக்கு ஹெலிகொப்டர் மூலம் உணவுப் பொருள்கள் போடப் படுகின்றன. வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட பகுதிகளில் இன்னும் சில தினங் களில் சுகாதார சேவைகளை ஆரம் பிக்கவேண்டியுள்ளது.

வெள்ளம், மண்சரிவு காரணமாக 100 கோடி ரூபா பெறுமதியான சொத் துக்கள் முற்றாக அழிந்துள்ளன- இவ்வாறு அவர் கூறினார். (எ)



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கென இந்தியாவி லிருந்து இராணுவத்தினர் வந்துள்ளனர். அவர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கிய காட்சி.

# வடக்கு முஸ்லிம்களின் நலனுக்காக விசேட செயலணி அங்குரார்ப்பணம்

## தலைவராக ரிஸாத் பதியுதீன் நியமனம்

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து வாழும் முஸ்லிம்களின் தேவைகளைக் கவனிக்க விசேட செயலணி ஒன்று நேற்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இச்செயலணியின் தலைவராக வன்னி மாவட்ட எம்.பி. ரிஸாத் பதியுதீன் நியமிக்கப்பட்டுள் ளார்.

நேற்றுக் காலை கொழும்பு கோட் டையிலுள்ள புனர்வாழ்வு, அகதிகள், மீள்குடியேற்ற அமைச்சில் இது நடை பெற்றது. அமைச்சர் ஜயலத் ஜய வர்த்தன தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் அமைச்சர் ரவூக் ஹக் கீம், பிரதிஅமைச்சர்பஷீர் சேகு தாவூத், எம்.பிக்களான எச்.எம்.என் ஹாரிஸ், அன்வர் இஸ்மாயில், திகர் தௌபீக், மன்னார் முன்னாள் ஈரோஸ் எம்.பி.எம்.என்.அயூப் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ)

# உடதும்பற பகுதியில் ஆயுதக் களஞ்சியம்! பொலீஸ் கண்டுபிடிப்பு; இரண்டு பேர் கைது!!

கொழும்பு,மே22

கண்டி, உடதும்பற பகுதியிலுள்ள ஒரு தொழிற்சாலையில் இயங்கிய பெரிய அளவிலான ஆயுதக் களஞ் சியம் ஒன்றை கண்டி பொலீஸார் நேற்று அதிகாலை கண்டுபிடித்தனர்.

10 ஆயிரம் துப்பாக்கி தோட்டாக் கள், 9 துப்பாக்கிகள் ஆகியவை அங்கிருந்து கைப்பற்றப்பட்டன. இரண்டு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டனர்.

தண்ணீரைப் போத்தலில் அடைக் கும் இத்தொழிற்சாலையின் நிலத் தின் அடியிலான ஓர் அறையிலேயே இந்த ஆயுதக்களஞ்சியம் இருந்தது.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஒரு வர் கண்டிப் பகுதியைச் சேர்ந்த ஒரு வர்த்தகரின் புதல்வர் எனக் கூறப்பட் டது.

தொலைநோக்கு துப்பாக்கிகள் 2, சைலன்சர் பொருத்திய துப்பாக்கி கள் 2, விமான எதிர்ப்புத் தோட்டாக் கள், வாள்கள் ஆகியவையும் கண்டு பிடிக்கப்பட்ட ஆயுதங்களில் அடங்கு கின்றன என்று பொலீஸார் தெரிவித் திருக்கின்றனர்.

## தவறுதலாக இடம்பெற்ற வெடிவிபத்தில் போராளி வீரச்சாவு

கிளிநொச்சி,மே22

திருகோணமலை சம்பூர் பகுதி யில் கடந்த 12ஆம் திகதி தவறுத லாக இடம்பெற்ற வெடிவிபத்து ஒன் றில் 2ஆம் லெப் குணாளன் (சிவ ராசா சந்திரநேசன் - யாழ்ப்பாணம்) வீரச்சாவடைந்துள்ளார் என விடுத லைப் புலிகள் அறிவித்துள்ளனர். (எ-8-12)

# சூதாட்டத்தில் ஈடுபட்டோர் பொலீஸாரிடம் சிக்கினர்!

## யாழ். கச்சேரிப் பகுதியில் சம்பவம்

யாழ்.கச்சேரிப் பகுதியில் பணம் வைத்துச் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த பத்துப்பேர் யாழ்.பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

- இவ்வாறு பொலீஸாரால் கைது செய்யப்பட்ட அனைவரும் நேற்று யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட் டனர்.

சண்முகராசா கஜேந்திரன், சிவ சம்பு தேவராசா, எஸ்ஞானசிவறஞ்சன், இராசலிங்கம் கணநாதன், கே.பாபு, பொன்னம்பலம் சந்திரசேகரன், ஜோசப் அல்பிரட், கந்தசாமி தங்கராசா, முத்து ராசா அரசு போல்ரன், தம்பிமுத்து விமலராஜா ஆகியோரே இவ்வாறு ஆஜர் செய்யப்பட்டவர்களாவர்.

நீதிவான் இவர்கள் ஒவ்வொருவ ரையும் தலா 200 ரூபா குற்றப்பண மாகச் செலுத்துமாறு உத்தரவிட்டார். (எ-8)

# பாதுகாப்பு, சமாதானம் குறித்து பல்கலையில் மக்கள் அரங்கம்

## எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்

யாழ்ப்பாணம்,மே22

'பாதுகாப்பு மற்றும் சமாதானம் குறித்த கூட்டு நடவடிக்கைகள்' என்ற தொனிப்பொருளிலான மக்கள் அரங் கம் ஒன்று நாளைமறுதினம் சனிக கிழமை முதல் இரு தினங்கள் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள் ளது.

இரு தினங்களும் காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணிவரை நிகழ்வு கள் இடம்பெறும்.

இந்நிகழ்வில் கருத்துரைகளை ஆற்றுவதற்காக தென் இலங்கையில் இருந்தும் பிரபல அரசியல், பொருளா தார நிபுணர்கள் வருகை தரவுள்ள னர்.

முதலாம் நாளான நாளைமறு தினம் சனிக்கிழமை முதலாவது அமர்வு யாழ் பல்கலைக்கழக ஆங் கிலத்துறை சிரேஷ்ட விரிவுரையா ளர் சாந்தி விக்னராஜா தலைமையில் நடைபெறும் ஆரம்ப உரையினை புலி களின் யாழ்மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ்.பல் கலைக்கழகத் துணைவேந்தர் பேரா சிரியர் எஸ்.மோகனதாஸ் ஆகியோர் நிகழ்த்துவர்.

ஜப்பானிய ஐ.எம்.டி.ஆர்.ஏ. தலை வர் நிமல்கா பெர்னாண்டோ கட்டுரை வாசிப்பார்.

இரண்டாவது அமர்வுகள் யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா தலைமையில் இடம்பெறும். ஜன நாயக இடதுசாரி முன்னணியின் தேசிய அமைப்பாளர் வாசுதேவ நாயக்கார கட்டுரை படிப்பார். தொடர்ந்து கலந்து ரையாடல் இடம்பெறும்.

கொழும்பு தேசிய சமாதானப் பேரவையைச் சேர்ந்த எஸ்பாலகிருஷ் ணன் தலைமையில் இடம்பெறும் மாலை அமர்வில், நீதிக்கும் சமாதா னத்துமான ஆணைக்குழுவின் தலை வர், அருட் தந்தை ஏஜ.பேர்னாட் அடிகளார் கட்டுரை வாசிப்பார். கலந்து ரையாடலுடன் அன்றைய நிகழ்வு கள் நிறைவுபெறும்.

இரண்டாம் நாளான ஞாயிற்றுக் கிழமை காலை அமர்வுகள், யாழ். கல்வி வலய உதவிக் கல்விப்பணிப் பாளர் கோகிலா மகேந்திரன் தலை மையில் இடம்பெறும்.

'கொழும்பு எஸ்.எஸ்.ஏ. அமைப் பைச் சேர்ந்த சிரேஷ்ட ஆய்வதிகாரி கலாநிதி தர்மினி இராஜசிங்கம் கட் டுரை வாசிப்பார்.

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறு வனங்களின் ஒன்றித் தலைவர் வைத் திய கலாநிதி வி.தியாகராஜா தலை மையில் இடம்பெறும் மாலை நிகழ் வில் கொழும்பு தேசிய சமாதானப் பேரவையினைச் சேர்ந்த பாலகிருஷ் ணன் கட்டுரை படிப்பார்.

தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக பொருளியல்துறைத் தலைவர் வி.பி. சிவநாதன் தலைமையில் கலந்துரை யாடல் இடம்பெறும் (எ-9)

# கெற்பலியில் பெண்களுடன் சேஷ்டை; சிப்பாய் உடனடியாக இடமாற்றம்!

## படைத்தளபதி பொதுமக்களிடம் உறுதிமொழி

யாழ்ப்பாணம்,மே.22

தென்மராட்சி கெற்பலி புதுவாழ் வுத் திட்டப் பகுதியில் அண்மையில் மதுபோதையில் பெண்கள் மீது சேஷ் டையில் ஈடுபட்ட சிப்பாயை உடனடி யாக இடமாற்றம் செய்வதாக 554 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி உறுதியளித்துள்ளார்.

தென்மராட்சி கெற்பலி புதுவாழ் வுத் திட்டப் பகுதியில் படையினர், மது போதையில் பெண்களுடன் சேஷ்டை யில் ஈடுபடுவதாக யாழ். மனித உரி மைகள் ஆணைக்குழுவிடம் அப்பகுதி பொதுமக்கள் முறையிட்டிருந்தனர்.

இது தொடர்பான விசாரணை களை மேற்கொள்வதற்கென யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு வின் அதிகாரி றுவான் சந்திரசேகரா நேற்றுமுன்தினம் அப்பகுதிக்குச் சென் றார். அவரிடமே படை அதிகாரி இந்த உறுதிமொழியை வழங்கினார்.

முன்னதாக, புதுவாழ்வுத் திட்டப் பகுதி மக்களுடன் கலந்துரையாடிய ஆர்.பி.சந்திரசேகரா, 554ஆவது படைப் பிரிவுத் தளபதியிடம் அப்பகுதி மக் கள் எதிர்நோக்கிய பிரச்சினை தொடர் பாக எடுத்துக் கூறினார்.

அதனையடுத்து அப்பகுதி தேவா லய முன்றிலில் ஒன்று கூடிய மக்களு டன் 554ஆவது படைப் பிரிவுத் தள பதி உரையாடினார்.

இச்சம்பவம் தொடர்பாக இனங் காணப்பட்ட சிப்பாய்க்கு உரிய தண் டனை வழங்கவும் அவரை உடனடி யாக இடமாற்றம் செய்யவும் -

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்ட ஈடு வழங்கவும் படை அதிகாரி முன் வந்தார்.

இதுபோன்ற சம்பவங்கள் இனி மேலும் இடம்பெறாத வண்ணம் தேவை யான நடவடிக்கை எடுப்பதாக உறுதி மொழி வழங்கிய படை அதிகாரி, மக்களுக்கு படையினரால் ஏற்படும் அசௌகரியங்கள் தொடர்பில் தம்மி டமோ, மனித உரிமைகள் ஆணைக் குழுவிலோ முறையீடு செய்யமுடியும் எனவும் தெரிவித்துள்ளார். (எ-9)

# வடக்கு-கிழக்கின் அபிவிருத்திக்கு செயல்திறன்மிக்க புதிய நிர்வாகக் கட்டமைப்பை பிரபா எதிர்பார்க்கிறார்

## ஹெல்கிஸனுக்கு எழுதிய கடிதத்தில் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

*விடர் ஹெல்கிஸன்,*
*பிரதி வெளிவிவகார அமைச்சர்,*
*றோயல் நோர்வே அரசு,*
*ஒஸ்லோ, நோர்வே.*

ஹெல்கிஸன் அவர்களே!

வடக்கு - கிழக்கு புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய அதிகாரங்களை அளிக்கும் விதத்தில இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்று எமது தலைவர் பிரபாகரன் கோரிக்கை விடுத்திருந்தார். இது தொடர்பாக நீங்கள் சமர்ப்பித்த ஒரு



தொகுதி யோசனைகள் குறித்து பதிலளிக்கும்படி தலைமைப்பீடம் எனக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

உங்களுடைய யோசனைகள் மூன்று ஆவணங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

அவை:-

- ஒரு நகல் ஒப்பந்தம் (விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலானது)
- வடக்கு-கிழக்கின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான வலுப்படுத்தப்பட்ட மற்றும் விரிவுபடுத்தப்பட்ட அமைப்பு முறையின் அடிப்படைகள் என்ற பூர்வாங்கப் பத்திரம்.
- இறுதியாக தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி அமைப்புக்களை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான அடிப்படையாகக கொள்வதை பிரேரிக்கும் ஒரு கடிதம். உங்களுடைய யோசனைகளை தீவிர கருத்துக்கும் பிரதிபலிப்புக்கும் நாம் எடுத்துக் கொண்டோம்.

### இடைக்கால நிர்வாகத்தை புலிகள் வற்புறுத்துவது ஏன்?

உங்களுடைய யோசனைகள் தொடர்பான எமது கடும் விமர்சனத்தை வெளிப்படுத்த முன்னர், வடக்கு-கிழக்குக்கு செயல்திறன் மிக்க இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று அவசியம் என்று புலிகளின் தலைமைப்பீடம் இந்தச் சந்தர்ப்பத்தில் வலியுறுத்தும் நிலைக்கு ஏன் தள்ளப்பட்டது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

வடக்கு - கிழக்குக்கு இடையிலான நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்தும் யோசனை முதன் முதலில் - கடந்த பொதுத் தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்னர் - புலிகளால் முன்வைக்கப்பட்டது. ஐ.தே.கட்சியின் தலைமைப்பீடம் இந்த யோசனையை அங்கீகரித்ததுடன் புலிகளின் தீவிர பங்களிப்புடனான இடைக்கால நிர்வாக கட்டமைப்பை ஆதரித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாகப் பிரச்சாரமும் செய்தார்.

தாய்லாந்தின் சட்டாஹிப்பில் நடைபெற்ற பேச்சுக்களின் ஆரம்பச் சுற்றிலேயே இடைக்கால நிர்வாகம் பற்றிய விடயம் கலந்துரையாடலுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

புலிகளின் யோசனைக்கு பதிலளித்த பேராசிரியர் பீரிஸ், இலங்கையின் அரசமைப்புக்கு வெளியில் அத்தகைய நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதில் உள்ள சட்ட மற்றும் அரசமைப்பு சிக்கல்கள் பற்றி விளக்கினார்.

### அரசியல் சர்ச்சைகள் ஏற்படுவதைத் தவிர்த்தோம்!

பேச்சுக்களின் ஆரம்பத்திலேயே அரசியல் சர்ச்சைகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக இந்த யோசனைக்குப் பதிலாக மனிதாபிமான மற்றும் புனரமைப்புப் பணிகளுக்கான கூட்டுச் செயலணி என்ற பெயரில் ஒரு நிர்வாகக் கட்டமைப்பை ஸ்தாபிப்பது என்று பேசசில் பங்குபற்றிய தரப்புகள தீர்மானித்தன.

இரண்டாவது சுற்று சமாதானப் பேச்சின் போது 'கூட்டுச் செயலணியை' உடனடி மனிதாபிமான மற்றும் புனரமைப்புத் தேவைக்கான உப குழு (சிரான்) என மாற்றுவதற்கு பேச்சுக் குழுக்கள் இணங்கின.

வடக்கு-கிழக்கு மக்களின் மனிதாபிமான மற்றும் புனரமைப்புத் தேவைகளை அடையாளம் காண்பதும் அந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்கான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் முன்னுரிமையைத் தீர்மானிப்பதும் இந்த உப குழுவின் பணியாக இருந்தது.

இந்த உப குழு, நாட்டுக்குள் இடம்பெயர்ந்த மக்களுக்குப் புனர்வாழ்வளித்தல், கண்ணிவெடி அகற்றும் மனித நேயத்திட்டங்கள் மற்றும் வீதிகளைப் புனரமைத்தல், கட்டுமானங்களை நிறுவுதல், சுகாதார வசதிகளை ஏற்படுத்துதல், பாடசாலை மற்றும் அது போன்ற - இடம்பெயர்ந்தோர் தமது மூல இடங்களுக்கு மீளத் திரும்புவதற்கு ஆதரவான - நடவடிக்கைகளுக்கு முன்னுரிமையை கொடுக்க இருந்தது.

நீண்டகாலப் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு வழமை நிலையை ஏற்படுத்திக் கொடுத்தல், நாட்டுக்குள் இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் அகதிகள் தங்களின் சொந்த வீடுகளுக்கும் கிராமங்களுக்கும் தடையின்றி திரும்புவதற்கான வசதிகளை வழங்குதல் ஆகியவற்றை மூல நோக்கமாகக் கொண்டு சம மற்றும் இணைப் பங்களிப்பின் அடிப்படையில் 'சிரான்' ஸ்தாபிக்கப்பட்டது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள்.

### சிரான் செயலிழந்தது

வடக்கு, கிழக்குத் தமிழ் பேசும் மக்களின் கவனிக்கப்படவேண்டிய அன்றாட, அவசியப் பிரச்சினைகளுக்குள் -

தமது இடங்களிலிருந்து வேரோடு அகற்றப்பட்ட பல லட்சக்கணக்கான மக்களை மீளக்குடியேற்றுவதும் அவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதும் தலையாய முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டிய விடயமாகும்.

விரைவான மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ளவே 'சிரான்' உருவாக்கப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக செயல்திறன் மிக்கதாகச் செயலாற்றுவதில் 'சிரான்' தவறியதோடு இடம்பெயர்ந்த மக்களின் கஷ்டங்கள் மற்றும் பாதிப்புகளைக் களையும் திசையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

புலிகளின் நல்லெண்ணமும் முழு ஒத்துழைப்பும் வெளிப்படுத்தப்பட்டும் கூட மக்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யக்கூடியவற்றை சிரானினால் வழங்கமுடியவில்லை.

இத்தகைய பெறுபேறு இன்மையும் அவசர மனிதாபிமான விடயங்கள் தொடர்பாகப் பயனுள்ள முடிவைத் தராத நிலைமையும் -

நீண்ட பல சுற்றுப் பேச்சுக்களின் முடிவில் உருவாக்கப்பட்ட ஒரேயொரு நிறுவனமான சிரான் மீது தமிழ் மக்களுக்கு இருந்த முழு நம்பிக்கையையும் சிதறடிக்கச் செய்துவிட்டன.

### பிரபாகரனின் எதிர்பார்ப்பு

இந்த விரக்தி தரும் சூழ்நிலையில் தான் உங்கள் வெளிவிவகார அமைச்சர் பீற்றர்ஸனுடனான கலந்துரையாடலின் போது -

மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை விரைவாக நடைமுறைப்படுத்தத்தக்க போதிய அதிகாரம் மற்றும் சட்ட அந்தஸ்துடன் கூடிய வழக்கத்துக்குமாறான புதிய தோர் - கட்டமைப்பு வடக்கு - கிழக்குக்குத் தேவை என்று பிரபாகரன் பிரேரித்தார்.

அவரது கருத்துப்படி அந்தப் புதிய கட்டமைப்பு -

மக்களுக்கு உறுதியளிக்கப்பட்ட சமாதானப் பெறுபேறுகள் தாமதமின்றியும், ஊழலின்றியும், அதிகார வர்க்கத் தடைகளின்றியும் அவர்களுக்கு வழங்கப்படத்தக்கதாக -

திறமையானதாகவும், வெளிப்படையானதாகவும், பொறுப்பு நிற்கக்கூடியதாகவும், திட்டவட்டமான செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்கள் கொண்டதாகவும் இருக்கவேண்டும்.

தமிழ்த்தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு, பூரணமாகப் புதிய அரசியல் நிலையை ஏற்படுத்தும் ஓர் உயர் அரசமைப்பின் கீழ்தான் சாத்தியம் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமை கருதுகின்றது. தற்போதைய ஸ்திரமற்ற அரசியல் சூழ்நிலையில் அத்தகைய முயற்சி யதார்த்தமாகாது.

நிரந்தர அரசியல் தீர்வு உடனடியாகக் கிட்டுவது சாத்தியமல்ல என்பதால் -

யுத்தத்தால் பாதிப்புற்றிருக்கும் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புதல், தமிழ் பேசும் மக்களின் தாயகத்தில் வழமை நிலையை மீள ஏற்படுததுதல் ஆகிய இலக்குகளை நிறைவேற்றுவதிலும் அவ்வ தொடர்பான முடிவுகளை எடுப்பதிலும் புலிகளுக்கு அதிகமான பங்களிப்பை வழங்கக் கூடிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை புலிகளின் தலைமை முன்வைக்கின்றது.

இந்த அம்சத்தில் -

1987 இன் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அடுத்து புலிகள் முக்கிய பங்கை வகிக்கத்தக்கதாக இடைக்கால நிர்வாக நடைமுறை ஒன்றை இந்திய அரசு முன்வைத்ததை நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இப்போது பிரேரிக்கப்படும் இடைக்காலக் கட்டமைப்பானது - இப்போது ஒன்றுக்கொன்று முரணாகச் செயற்படுவதோடு, அபிவிருத்தி நிதிகள் செயல்திறன்மிக்க விதத்தில பயன்படுத்தப்படுவதற்குத் தடையாகவும் இருக்கும் பலதரப்பட்ட - தற்போதைய - கட்டமைப்புக்களை ரத்துச் செய்வதாக அமைய வேண்டும் என பிரபாகரன் எதிர்பார்க்கின்றார்.

இறுதியாக, ஜப்பானில் - விரைவில் நடைபெறவிருக்கும் உதவும் நாடுகள் கூட்டத்தின் பின்னணியில் -

வடக்கு - கிழக்கில் மீள்குடியேற்றம், புனர்வாழ்வளித்தல், புனரமைத்தல் ஆகிய பணிகளை விரைவுபடுத்தத்தக்க, விசாலமான அதிகாரங்களுடன் கூடிய, செயல்திறன்மிக்க, தீவிர - புதிய - நிர்வாகக் கட்டமைப்பு ஒன்று - தாமதமின்றி - உடனடியாக உருவாக்கப்படவேண்டும் என்று புலிகளின் தலைமை கருதுகின்றது. சிரானினால் - அதன் மட்டுப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மற்றும் அதிகாரங்களுடன் - இத்தகைய மிகப்பெரிய இலக்கை ஆற்ற முடியாது என்றே நாம் கருதுகின்றோம்.

### தடங்கல்கள்

இனி, வன்னித் தலைமையகத்துக்கும் லண்டனில் எனக்கும் நீங்கள் அனுப்பிய தொடர்பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு தொகுதி யோசனைகளை மீளாய்வு செய்து விமர்சிப்போம்.

இலங்கை அரசுடனான கலந்துரையாடல்களின் பின்னர் உங்களால் தயாரிக்கப்பட்ட இரண்டு பக்க ஒப்பந்த நகல் கடந்த 17 ஆம் திகதி தமிழ்ச்செல்வனிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான கூட்டு ஒப்பந்தமாக அதை வரைந்துள்ள நீங்கள் வடக்கு - கிழக்கு அபிவிருத்தி மற்றும் புனரமைப்புக் கவுன்ஸிலை (DRC) சிரானின் விரிவுபடுத்தப்பட்ட ஒரு வடிவமாக அதில் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளீர்கள்.

பிரேரிக்கப்பட்ட அந்தக் கட்டமைப்பின் செயற்பாடுகள், அதிகாரங்கள் மற்றும் நடைமுறைகள் என்பன உங்களின் நகலின்படி, 'டோக்கியோ உதவும் நாடுகளின் கூட்டத்தில் உதவும் நாடுகள் சமூகத்துடனான கலந்துரையாடல்களை அடுத்து' இரு தரப்புக்கு மிடையிலான பேச்சுக்கள் மூலம் உறுதிசெய்யப்படவேண்டும்.

'அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு கவுன்ஸிலானது' ஒரு திட்டவட்டமான - உறுதியான - யோசனையாக முன்வைக்கப்படாமல் -

அதற்குப் பதிலாக

சர்வதேச சமூகத்தின் வழிகாட்டல் மற்றும் அங்கீகாரத்துக்கு அமைய ஒரு கட்டமைப்பை உருவாக்குவதற்கான ஒரு கருத்தாக அல்லது எண்ணமாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இடைக்கால நிர்வாகத்துக்குரிய உறுதியான கட்டமைப்புத் தொடர்பான பிரபாகரனின் எதிர்பார்புக்களை இந்த 'அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு கவுன்ஸில்' தொடர்பான நகல் நிறைவு செய்யவில்லை.

அதற்குப் பதிலாக -

உத்தேச சமஷ்டித் தீர்வுக்காகத் தோண்டியெடுக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்ட வழிகாட்டு வரைபடத்தையும் (Road Map) உள்ளடக்கி பல்வேறு விடயங்களையும், அவை தொடர்பான கட்டுப்பாட்டு உறுதிகளையும் கொண்ட ஒரு பொதியாக 'அபிவிருத்தி மற்றும் புனரமைப்புக் கவுன்ஸிலை' காட்டுவதற்கு இந்த நகல் பத்திரம் முயல்கின்றது.

அடுத்த சுருக்க நகல் 'வடக்கு-கிழக்கின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான வலுப்படுத்தப்பட்ட மற்றும் விரிவுபடுத்தப்பட்ட அமைப்பு முறையின் அடிப்படை' என்ற தலைப்பிலானது. 'அபிவிருத்தி மற்றும் புனரமைப்புக் கவுன்ஸிலின் கட்டமைப்புத் தொடர்பான சில உள்ளக விவரங்களைத் தருவதால் இது சிரத்தைக்குரியதாகின்றது.

சிரானின் செயற்பாட்டு நடைமுறையை விரிவுபடுத்தும் இந்த நகல, அதனைக் கொள்கை வகுக்கும் சபை, திட்டக் குழு மற்றும் பிரதமரின் அலுவலகத்திலிருக்கும் ஏக அதிகாரங்களை தனக்கு திசை திருப்பும் நிர்வாக அமைப்பு என மூன்று அடுக்கு கட்டமைப்பாக விரிவுபடுத்துகின்றது.

இந்த நகல் தீர்மானங்களை எடுக்கும் அமைப்புகளில் (கொள்கை வகுக்கும் சபை மற்றும் திட்ட குழுவில்) விடுதலைப் புலிகளுக்குச் சம பிரதிநிதித்துவத்தை வழங்கும் அதேசமயம் "நிர்வாக அடிப்படையில், வடக்கு - கிழக்கில் வசிக்கும் தமிழர்களைப் பணிக்குக் கொள்ளவேண்டும்" என்று கூறுகின்றது. இதன் அர்த்தம், நிர்வாகக் கட்டமைப்பில் புலிகளின் அரசியல் பிரதிநிதிகள் எந்தப் பங்குபணியையும் ஆற்ற முடியாது என்பதாகும்.

### விளக்கமற்ற ஆவணம்

முக்கியமாக, இந்த ஆவணம் சுருக்கமாக உள்ளது; தீர்மானம் எடுக்கும் அமைப்பின் அதிகாரங்கள், செயற்பாடுகள் தொடர்பாகத் திட்டவட்டமான வரையறைகளைத் தரத் தவறியுள்ளது. அபிவிருத்தி மற்றும் புனரமைப்புக் கவுன்ஸிலின் சட்ட அந்தஸ்துப் பற்றிய கேள்விக்கும் உரிய விளக்கம் இல்லை. ஆனால், இறுதியாக, நாடாளுமன்றத்தினால் சட்டமாக்கப்பட வேண்டியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடைசியாக 'அபிவிருத்தி மற்றும் புனரமைப்புக் கவுன்ஸில்' ஸ்தாபிப்பது பற்றிய இறுதிமுடிவை எடுக்கும் பொறுப்பு உதவும் நாடுகளிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பது முக்கியமானதாகும்.

இந்த நகல் ஆவணம் உங்களால தயாரிக்கப்பட்டதா? அல்லது அரசினால் முன்வைக்கப்பட்ட ஒரு தொகுதி யோசனைகளா என்பது எங்களுக்குத தெரியவில்லை.

புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வுப் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியாக அதிக அதிகாரங்களுடன் 'மத்திய ஒருங்கிணைப்பு முறை' ஒன்றை ஸ்தாபிக்க அரசு முடிவு செய்திருப்பதாகக் குறிப்பிட்டு கொழும்பு ஊடகங்கள் ஏற்கனவே அதற்கு அதிக பிரசார முக்கியத்துவம் கொடுத்துள்ளன.

இந்த யோசனைகள் புதிய அம்சங்களை கொண்டிருந்த போதிலும் விடுதலைப் புலிகளின் குறிப்பிடத்தக்க பங்குபற்றலுடன் வடக்கு-கிழக்குக்கு ஆக்கபூர்வமான இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படவேண்டும் என்று விடுதலைப் புலிகளின் தலைவரினால் விடுக்கப்பட்டிருந்த பிரதான யோசனை தொடர்பாக மட்டுப்படுத்தப்பட்டனவாகவே உள்ளன.

இறுதியாக, வடக்கு-கிழக்கின் அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு தொடர்பான விடயங்களை கையாளும் ஒரு வழியாக உள்ளூராட்சி மன்றங்களைப் பயன்படுத்தலாம் என்று உங்கள் கடிதம் யோசனை கூறுகிறது. உங்களின் புது முறையிலான முன்முயற்சியை நான் பாராட்டும் அதேவேளை, உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களும் கடமைகளும் மிகவும் கட்டுப்பாடானவை, வரையறுக்கப்பட்டவை என்பதையும் நான் கூறவேண்டும். எனவே, புனர்வாழ்வு, புனரமைப்பு தொடர்பான பாரிய பொறுப்புக்களை பொறுப்பேற்க அவை ஆக்கபூர்வமான நிர்வாக அமைப்பாக இருக்க முடியாது.

இதனைவிட அரசியல் சுதந்திரத்திற்காகவும் தனிநாட்டிற்காகவும் விடுதலைப் போரை நடத்தி, இறுதியில் எந்த ஓர் அதிகாரமும் அற்ற கிராம சபைகளில் போய் நாம் முடிந்திருக்கிறோம் என்று தமிழ் மக்கள் எம்மைப் பரிகசிப்பார்கள்.



### பிரதமரின் சாதகமான பதிலைப் பெற்றுத் தாருங்கள்

சமாதான நடைமுறையில் ஏற்பட்டிருக்கும் இன்றைய தேக்க நிலையை போக்க தீர்வு தேடுவதில் தாங்கள் கொண்டிருக்கும் சோர்வுறாத முயற்சிக்காக எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதேவேளை இடைக்கால நிர்வாக அமைப்புக்கான எமது தலைவர் பிரபாகரனின் யோசனைகளுக்கும் அதிகாரபூர்வமாகப் பதில் அளிக்குமாறு பிரதமர் ரணில்விக கிரமசிங்கவை கோரும்படி நான் தாழ்மையுடன் உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

தனது யோசனைகளையும் எண்ணங்களையும் தெளிவானதும் உறுதியானதுமான வழிகளில் விளக்கி பிரதம மந்திரி அளிக்கும் சாதகமானதும் ஆக்கபூர்வமானதுமான பதில் சமாதான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது, ஜப்பான் உதவி வழங்கும் மாநாட்டில் பங்குபற்றுவது ஆகியன குறித்து எமது தலைமைப்பீடம் தீர்க்கமான ஒரு தீர்மானத்தை மேற்கொள்ள நிச்சயமாக உதவும்.

*நன்றி*
*வாழ்த்துக்கள்*
*(அன்ரன் பாலசிங்கம்)*
*சிரேஷ்ட பேச்சாளர்,*
*தமிழீழ விடுதலைப் புலிகள்.*




பஜாஜ் இலங்கையில் முதன்முறையாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்.

சக்தி, கவர்ச்சிகரமான வடிவமைப்பு, நம்பகத்தன்மையைப் பற்றி நாம் அனைவரும் நினைப்பதுண்டு... நவீன தொழிநுட்பத்துடன் அதிக சக்தியுடைய 150 சிசி என்ஜின் கொண்ட பஜாஜ் பல்சர் உங்கள் மனதை நன்கறிந்த எங்கள் காலத்திற்குரிய மோட்டார் சைக்கிள்.

ரூபா. 107,835/-
மேற்படி விலை அனைத்து வரிகளும் புறநீங்களானது.
இலவச ஜக்கெட்!

அது மட்டுமல்ல... உங்கள் நம்பிக்கையை என்றும் பாதுகாக்கும் வரையறுக்கப்பட்ட டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி மற்றும் நாடு முழுவதும் பரந்து காணப்படும் சேவை, உதிரிப்பாக முகவர்கள் வலைப்பின்னலூடாக உங்கள் சேவைக்கு தயார் நிலையில். இப்போது நீங்களும் அனைத்தையும் முந்திக்கொண்டு முன்னணியில்...

தன்னிகரற்ற உத்தரவாதம்

- 150 சிசி 4 ஸ்ட்ரோக் என்ஜின்
- டிஸ்க் பிரேக் (உலக புகழ்பெற்ற இத்தாலி நாட்டு பிரம்போ கம்பனியின் வடிவமைப்புடன்)
- 5 கியர்கள் கொண்ட வேக ஒழுங்கு
- கிக் மற்றும் இலக்ரிக் ஸ்டாட்டர்
- 18 லீட்டர் கொள்ளளவுடைய எரிபொருள் தாங்கி (3 லீட்டர் ரிசவ்)
- வேகமானி, ட்ரிப் மீட்டர், எரிபொருள் சுட்டி மற்றும் கவர்ச்சிகரமான டெல்டேல் விளக்குகளுடன் (Telltale light)
- சைட் ஸ்டேண்ட் சுட்டி காட்டி
- பக்க உறைகள் (Side covers) இரண்டிற்குமான பூட்டு

DPMC **டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிடட்.**

அதிகாரம் பெற்ற விற்பனையாளர் : குறிஞ்சி டிரேடர், 75, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0777 – 979279

உதயன்

# வடக்கு - தெற்கு உறவை வலுப்படுத்தும் உதவி

இயற்கைச் சீற்றத்துக்கு முகம் கொடுக்க முடியாது திண்டாடும் தென்னிலங்கைக்கு வடக்கிலிருந்து நேசக்கரம் நீட்டப்பட்டிருக்கின்றது.

இருப்புக்கான உரிமைக்காகப் பிரிந்து நின்று போராடினாலும் - இனத்தால் வேறுபட்டு நின்றாலும் - இந்த இலங்கைத் தீவில் வாழும் சமூகத்தவர்கள் என்ற வகையில் தென்னிலங்கை மக்களும் நமது சகோதரர்களே என்ற உணர்வு தம்முள் ஊறி நிற்பதை வடக்கு மக்கள் நிரூபித்திருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய ஐந்து வடக்கு மாவட்டங்களில் இருந்து முதல் கட்டமாக - தலா ஒவ்வொரு லொறிகளில் - சுமார் இருபத்தைந்து லட்சம் ரூபா நிவாரணப் பொருள்கள் தென்னிலங்கை வெள்ள அகதிகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகள், ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள தமிழர் எழுச்சிப் பேரவைகளுடன் இணைந்து அந்தந்த பிரதேச மக்களிடம் பொருள்களைத் திரட்டி தென்னிலங்கைச் சகோதரர்களுக்கு அனுப்பி வைத்திருக்கின்றார்கள்.

முதல் தொகுதியாக 10 ஆயிரம் கிலோ அரிசி மற்றும் சீனி, மா, கருவாடு, உப்பு, பருப்பு, பால் உணவு ஆகியவையும் உடைகள், போர்வைகள் என்பவையுமே அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றன.

ஐந்து மாவட்டங்களில் இருந்தும் தருவிக்கப்பட்ட நிவாரணப் பொருள்களை வவுனியாவில் புலிகளின் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன், ஒன்று சேர்த்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பி வைத்திருக்கின்றார்.

தென்னிலங்கையில் இயற்கை அன்னையின் சீற்றத்தால் ஏற்பட்ட பேரழிவு கணக்கிடப்படமுடியாதது. இந்த அழிவுகளிலிருந்து மீள்வதற்காக அந்த மக்களுக்கு பெருமளவு நிவாரண உதவிகள் வழங்கப்படவேண்டியுள்ளன. வெள்ளத்தால் பாதிப்புற்றோருக்கு உதவிகளும் பெருவெள்ளம் போல திரண்டு வர வேண்டும். அவர்களுக்கு நிறைவு செய்யப்பட வேண்டியிருக்கும் தேவைகளுடன் ஒப்பிடும் போது, வடக்கிலிருந்து முதல் கட்டமாக அனுப்பி வைக்கப்பட்ட பொருள்களின் அளவு சிறு துளியே.

என்றாலும், யுத்தத்தில் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் - உதவிகளையும் நிவாரணத்தையும் தாங்களே எதிர்பார்த்துக் காத்திருக்கும் மக்கள், தங்கள் கஷ்டத்துக்கு மத்தியிலும் - தென்னிலங்கையில் வாடும் தமது சகோதரர்களுக்காக தம்மை ஒறுத்து - தமது தேவைகளை ஒறுத்து - உதவ முன்வந்திருப்பது மெச்சத்தக்கது; வீதந்து பாராட்டத்தக்கது.

27 பிள்ளைகளுடன் வறுமையில் வாடிய குசேலர், தமது பால்ய நண்பனும் அரசனுமான கிருஷ்ணருக்கு தமது மடியில் கைப்பிடி அவலை பிசைந்து எடுத்துக் கொண்டு அவரைச் சந்திக்கச் சென்றாராம். பார் ஆளும் மன்னனுக்கு - உல்லாசத்தில் திகழும் அரசனுக்கு - ஏழை குசேலர் அன்புடன் அளித்த அந்த அவல் அமிர்தம் போல் இனித்ததாம் என்று ஒரு கதை உண்டு.

அதுபோல, யுத்த அழிவுகளால் வாடும் வடக்கு மக்களிடமிருந்து கிடைத்த உதவி, தென்னிலங்கை வெள்ள அகதிகளைப் பொறுத்தவரை சிறுதுளியாக இருக்கலாம். ஆனால், அந்த உதவியின் ஊடாக அவர்கள் வெளிப்படுத்தியிருக்கும் சகோதரத்துவ உணர்வு வெள்ளத்தால் பாதிப்புற்றிருக்கும் மக்களுகக்குப் பெரும் தெம்பாக அமையும் என்பது நிச்சயம்.

''காலத்தால் செய்த உதவி ஞாலத்திலும் பெரிது'' என்பது போல - சமூக நல்லிணக்கத்துக்காவும் இன சௌஜன்யத்துக்காகவும் பல தரப்புகளிலிருந்தும் முயற்சி எடுக்கப்படும் இந்தச் சமயத்தில் - உதவி வழங்கும் வடக்கு மக்களின் இந்த நடவடிக்கை நல்லதொரு முன்மாதிரியாக அமைந்துள்ளது.

அனர்த்தங்கள் அவை எந்த வடிவத்தில் வந்தாலும் - இயற்கைச் சீற்றமாயினும் சரி, யுத்தக் கொடூரமானாலும் சரி - அவற்றை எதிர்கொள்ளும் அப்பாவி மக்களுக்கு அவசர, அவசிய உதவிகளை வழங்க வேண்டியது ஏனைய மக்களின் மனிதாபிமானக் கடப்பாடாகும். இந்த மனிதாபிமானப் பண்புதான் எமது சமூகங்களை இறுகக் கட்டி வைத்திருக்கும் கட்டு; தளை.

இனப்பிரச்சினைக்கு இணக்கத் தீர்வு காணும் முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கும் இந்தத் சமயத்தில், இந்த மனிதாபிமானக் கட்டு மேலும் வலுப்படுத்தப் பட்டிருப்பது அமைதித் தீர்வு காணும் முயற்சிக்கு மேலும் உறுதியை அளித்திருக்கும்.

காலம் அறிந்து எடுக்கப்பட்ட நடவடிக்கையாக இது பாராட்டப்பட வேண்டும்.

# தீவகப் பாடசாலைகள் அனைத்தும் கஷ்டப் பிரதேசத்தில் அடக்கப்படும்!

## கல்வி அதிகாரி வாக்குறுதி

மண்டைதீவு,மே22

தீவகக் கல்வி வலயத்தில் உள்ள 51 பாடசாலைகளும் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகள் என்ற தரத்தில் உள்ளடக்கப்படும். இதற்கான நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும்.

இவ்வாறு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் கடந்த வாரம் நடைபெற்ற தீவக அதிபர்களீ, மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்ட கலந்துரையாடலில் மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் உறுதியளித்தார்.

தீவக அதிபர்களின் கோரிக்கையை அடுத்தே இந்த வாக்குறுதியை அவர் தெரிவித்தார்.

தீவகப் பாடசாலைகளில் கடல் கடந்த தீவுப் பாடசாலைகள் உட்பட பல பாடசாலைகள் அதி கஷ்டப் பாடசாலைகளாகவும் சில பாடசாலைகள் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளாகவும் ஏற்கனவே வகைப்படுத்தப்பட்டிருந்தன.

ஏறக்குறைய 14 பாடசாலைகள் மட்டுமே இதற்குள் அடங்க வில்லை. போக்குவரத்து, நீர்விநியோகம், [illegible] மற்றும் அடிப்படை வசதிகள் தொடர்பாக பாடசா[illegible]க்கிடையே பெரியளவு வேறுபாட்டை இனங்காணமுடியாதென பாடசாலை அதிபர்கள் சுட்டிக்காட்டியதை அடுத்தே அவர் மேற்கண்டவாறு உறுதியளித்ததாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-88)

## மாதர் மாண்மியம்

### புண்ணியரே பூவையராவரன்றோ...!

கண்ணகி கண்ட கற்பை
கம்பனின் சீதை காட்டும்
விண்ணுயர் பண்பை என்றும்
வித்தகி வாழ்ந்து காட்டு.
மண்ணினில் தமிழர் கண்ட
மாசறு கற்பின் மேன்மை
எண்ணிடில் உள்ளம் பாகாய்
இனித்திடும் அறிவாயோ நீ!

புண்ணியம் செய்தோர் தானே
பூவையராய்ப் பிறப்பர் மண்ணில்
என்ற அக்கவியின் கூற்றை
என்றுமே மனதில் கொள்வாய்
பெண்ணே! நீ எழுச்சி பெற்றால்
பிறர்க்கு நாம் அடிமையாக மாட்டோம்
கண்ணே! என்மீது கோபம்
கனவிலும் கொள்ள வேண்டாம்.

- விகடகவி.

# கிளிநொச்சியில் இயங்கி வந்த சிறுவர் இல்லத்துக்குத் தடை!

## தமிழீழ நீதிமன்றம் விதித்தது

கிளிநொச்சி,மே22

கிளிநொச்சியில் ஆலய வளாகம் ஒன்றில் தனிநபர் ஒருவரால் நடத்தப்பட்டு வந்த சிறுவர் பராமரிப்பு இல்லம் தடை செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாதகாலமாக கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் உள்ள ஆலய வளவில் இந்தியாவில் இருந்து நாடுதிரும்பிய கனகபுரத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் 'ஆனந்தம் இல்லம்' என்ற பெயரில் சிறுவர் பராமரிப்பு இல்லம் ஒன்றை ஆரம்பித்து நடத்தி வந்தார்.

இந்த இல்லத்தில் 12 வயதிற்கும் 16 வயதிற்கும் இடைப்பட்ட சுமார் 100 சிறுவர், சிறுமியர் தங்கியிருந்தனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள எந்தவொரு நிர்வாகத்தினதும் அனுமதியைப் பெறாமலும், சிறுவர் பாதுகாப்பிற்கான நிலையான சட்டதிட்டங்கள் எதனையும் பின்பற்றாமலும் இயங்கிய இந்த இல்லத்தின் செயற்பாடுகள் குறித்து கிளிநொச்சி காவல்துறையினருக்கு பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

இது தொடர்பாக அரச அரசசார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்புகொண்ட காவல்துறையினர், தேவையான தரவுகளைப் பெற்று விசாரணைகளை மேற்கொண்டனர். அப்போது சிறுவர் பாதுகாப்புக்கான ஏற்பாடுகள் எதுவும் இந்த நிறுவனத்தில் காணப்படாத நிலை கண்டறியப்பட்டது.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் சிறுவர் பாதுகாப்புத் தொடர்பான மனுவொன்றை கிளிநொச்சி காவல்துறை சமர்ப்பித்தது. இந்த மனுவைக் கடந்த 19 ஆம் திகதி விசாரணை செய்த கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதியாளர் சம்பந்தப்பட்ட சிறுவர் இல்லத்தின் செயற்பாடுகளை இடைநிறுத்த உத்தரவிட்டார். அந்த இல்லத்தில் தங்கியுள்ள சிறுவர்களின் பாதுகாப்பையும் உரிமையையும் கருத்திற்கொண்டு உரிய அனுமதிகளைப் பெற்றுக்கொண்டே சிறுவர் கல்வி விடயத்தில் வேலைத்திட்டங்களை மேற்படி இல்ல நிர்வாகம் மேற்கொள்ளலாம் எனவும் நீதியாளர் உத்தரவிட்டுள்ளார். (ஒ-8)

# சுகாதார சீர்கேட்டை ஒழிப்பதில் மாநகரசபையுடன் ஒத்துழையுங்கள்!

## பொதுமக்களுக்கு ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,மே22

சுகாதார சீர்கேடுகளை ஒழிப்பதில் யாழ்.மாநகர சபையுடன் பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும். இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் யாழ்.மாநகராட்சி ஆணையாளர் இ.இராமலிங்கம்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாநகரசபை எல்லைக்குள் சேரும் கழிவுகளை சபை வாகனங்கள் மூலம் காக்கைதீவிலுள்ள சபைக்குச் சொந்தமான காணிக்குள் கொட்டுவது வழக்கம்.

இவ்விடத்தில் பழுதடைந்த கடலுணவுகள், களவாக வெட்டப்படும் மாடுகளின் கழிவுகள், கோழிப்பண்ணைகளில் சுத்தம் செய்யப்படும் கோழியிறைச்சிக் கழிவுகள், கண்ணாடி விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களில் சேரும் கழிவுக் கண்ணாடிகள், யாழ்.போதனா வைத்தியசாலைக் கழிவுகள், நல்லூர் பிரதேச சபையின் கொல்களக் கழிவுகள், உணவுவிடுதிகள் மற்றும் தேநீர்ச்சாலைக் கழிவுகள் போன்றன சட்டவிரோதமாக பொறுப்பற்றவர்களால் தினமும் கொட்டப்பட்டு வருவதினால் காக்கைதீவுப் பகுதி மட்டுமல்லாமல் அவ்விடத்தைச் சூழவுள்ள பிரதேசமும் அயலிலுள்ள மக்கள் குடியிருப்புக்களும் பாரிய சுகாதார அச்சுறுத்தலை எதிர்நோக்கிய வண்ணம் உள்ளன.

மேற்குறித்த சீர்கேடுகளை ஓரளவேனும் நிவர்த்தி செய்யும் முகமாக காக்கைதீவிலுள்ள குப்பை கொட்டும் இடத்தில் குழிகளை வெட்டி அதிலிருந்து பெறப்படும் மணலை, தினமும் அங்கு கொட்டப்படும் கழிவுகளுக்கு மேல் போட்டுப் பரவுவதுடன் அக்குழிகளினுள் துர்நாற்றத்தை ஏற்படுத்தும் கழிவுகளைப் போட்டு மூடுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சுகாதாரத்திற்கு தீங்கும் துர்நாற்றமும் ஏற்படுத்தக் கூடிய கழிவுகளை சபை வாகனங்கள் மூலம் அகற்றி அவற்றை மேற்படி குழிகளுக்குள் போட்டு மூடுவதற்கு கழிவகற்றல் கட்டணமாகச் சிறுதொகைப் பணத்தினைச் செலுத்தினால் சபைத் தொழிலாளர்களே அவற்றை திருப்திகரமாக அப்புறப்படுத்தி உதவுவார்கள். அதனால் மேற்குறித்த கழிவுகளைப் பாதுகாப்பாக அகற்றுவதற்கு விரும்புவோர் மாநகரசபையின் பொது சுகாதார பொறியியற் பிரிவுடன் தொடர்பு கொண்டு ஏற்ற ஒழுங்குகளைச் செய்வதன் மூலம் மேற்குறிப்பிட்ட சுகாதாரச் சீர்கேடுகளை ஒழிப்பதில் ஒத்துழைக்கவும் என்றுள்ளது.

### 18 வருடங்களின் பின்னர்

# வவுனியாப் பிரதேச கிராமத்தில் சிங்கள குடும்பங்கள் மீள்குடியமர்வு

வவுனியா,மே22

வவுனியா வடக்குப் பகுதியில் உள்ள கொக்குவெளி கிராமத்தில் இருந்து சுமார் 18 வருடங்களின் முன் இடம்பெயர்ந்த சிங்களக் குடும்பங்கள் தற்போது நிலவும் சமாதானச் சூழ்நிலையினை அடுத்து தமது சொந்தக் கிராமத்திற்கு திரும்பிக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

1985ஆம் ஆண்டு கொக்குவெளி கிராமத்தில் வாழ்ந்த சுமார் 85 சிங்களக் குடும்பங்கள் யுத்தசூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து மதவாச்சி நொச்சியாகம, அநுராதபுரம் ஆகிய இடங்களுக்கு சென்று வாழ்ந்து வந்தனர். தற்போது சுமுக நிலை உருவானதையடுத்து அக்குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் [illegible] தமது சொந்த இடங்களுக்கு திரும்பத் தொடங்கியுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இவர்கள் மீளக்குடியமர்வதற்காக குடும்பம் ஒன்றிற்கு அரசு ஆயிரம் ரூபாவை உதவித் தொகையாக வழங்கி வருகிறது. தற்போது கொக்குவெளிக கிராமம் காடுமண்டி உள்ளது. இதனால் அதனை துப்புரவு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஒ-164)

### நாளை

வைகாசி 09
வெள்ளிக்கிழமை
23.05.2003
திதி : அட்டமி
முன்னிரவு 11.23 வரை
நட்சத்திரம் : அவிட்டம்
முற்பகல் 9.08 வரை
சுபநேரம் : 5.52 -7.22
ராகுகாலம் : 10.22 -11.52
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

எல்லோரும் ஒரே திசையில் இழுத்தால் இந்த உலகம் கூடத் தலை கீழாகப் புரண்டு விடும்.

# கலாசாரத்தைப் பேணுபவர்களிடம் ஆபாசப்படம் பார்த்தோர் சிக்கினர்!

மல்லாகம்,மே22

உடுவில் டச் வீதி, மயிலங்காடு, சுன்னாகம் ஆகிய பகுதிகளில் ஆபாசப் படங்களைப் பார்த்தவர்கள் கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களிடம் சிக்கினர்.

மேற்படி பகுதிகளில் ஆபாசப் படங்கள் இரகசியமாகக் காண்பிக்கப்படுவதாக பொதுமக்கள் கலாசாரத்தைப் பேணும் இளைஞர்களிடம் தகவல் கொடுத்தனர். இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையிலேயே ஆபாசப்படங்களை காண்பித்தோரும் பார்த்தவர்களும் பிடிபட்டனர்.

அவர்கள் அனைவரையும் கடுமையாக எச்சரித்து விடுத்த கலாசாரத்தைப் பேணும் இளைஞர்கள் ஆபாசப் படப் பிரதிகளையும் பறிமுதல் செய்து அழித்தனர். (ஒ-ரி)

# டோக்கியோ மாநாடு நடப்பதற்கு சர்வதேச சமூகத்தினர் ஊக்குவிப்பு

## சமாதானம் முறியக்கூடாது என அமெரிக்காவும் எச்சரிக்கை

டோக்கியோ மாநாட்டில் பங்கு பற்றுவதன் மூலம் வடக்கு - கிழக்கின் அபிவிருத்திக்கு மட்டுமன்றி முழு இலங்கைக்கும், மூன்று ஆண்டுகளுக்கு 300 கோடி டொலர்களைப் பெற்று, யுத்தத்தின் அழிவுகளிலிருந்து இலங்கை மீளப்போகின்றது என்று எதிர்பார்ப்புகள் தெரிவிக்கப்படுகின்றன.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் சர்வதேசத்தினது நிதியுதவிகளைப் பெற்று சமாதானத்தை உறுதி செய்யப் போகின்றார்களா?

அல்லது ஆயுதப்போரை இனிமேல் செய்யப் போவதில்லை என்று சைகைகளைக் காண்பிக்கப் போகின்றார்களா?

கடந்தகால வரலாற்றையும் போக்கையும் கருத்திற்கொள்ளும்போது இத்தகைய கேள்விகள் பல எழுகின்றன.

இன்று ஏற்கப்பட்டுள்ள சமஷ்டியை அன்று தந்தை செல்வாவும் கேட்டார். தாம் சமஷ்டியை வழங்கத் தயார் என்றும் சமஷ்டியை தாம் எதிர்க்கவில்லை என்றும் கூறும் ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் தந்தை செல்வா அன்று கோரிய போது தட்டிக்கழிக்க முடிந்தது.

இன்று சகல இனங்களும் சமத்துவமாக வாழவேண்டும் என்ற விரிந்த சிந்தனையினால் இந்த ஞானோதயம் பிறந்ததல்ல.

அதுமட்டுமன்றி, தந்தைசெல்வா காலத்து போக்கில் தொடர்வதற்கு அனுமதித்திருந்தால் இப்பொழுது தமிழின அடையாளமே அருகிப் போயிருக்கவும் கூடும்.

### தமிழினத்தின் அடையாளம்

இன்றும் விருப்பத்தின் பெயரில் சமஷ்டி ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதையும் கருத்திற்கொள்ளவேண்டும்.

இந்தப் பின்னணியே புலிகள் ஆயுதங்களைக் கைவிடவேண்டும், வன்முறைகளைக் கைவிடவேண்டும் என்ற வகையிலான பல்வேறு விதமான கோரிக்கைகளுக்கும் இடங்கொடுத்து வந்துள்ளது.

1983 இல் ஆயுதப் போராட்டம் ஆரம்பமானபோது ஆட்சியிலிருந்த ஜே.ஆர். ஜயவர்த்தன ஆயுதங்களைக் கைவிட்டால் பேச்சுக்குத் தயார் என்று கூறிவந்தார்.

அவரின் பின் அதிகாரத்துக்கு வந்த தென்னிலங்கைத் தலைவர்கள் அனைவரும் இதனையே வாய்ப்பாடாக உச்சரித்தனர்; இப்போதும் உச்சரிக்கின்றனர்.

சமாதானப் பேச்சுகளில் ஈடுபட்டிருக்கும் காரணத்தினால் ஐ.தே.மு. அரசாங்கத்தின் தலைவர்கள் மட்டும் இதற்கு விதிவிலக்காக இருக்கிறார்கள் எனலாம்.

சர்வதேச நாடுகளும் இதனையே நம்புகின்றன. ஆயுதங்களை புலிகள் கைவிடவேண்டும் என்று கூறுகின்றன. போராடி சுதந்திரம்பெற்ற அமெரிக்கா இதில் முதன்மைநிலை வகிக்கிறது.

ஆயுதங்களையும் வன்முறைகளையும் புலிகள் சொல்லிலும் செயலிலும் கைவிடவேண்டும் என்று எப்போதுமே வலியுறுத்துகின்றது. ஒஸ்லோ மாநாட்டில் வலியுறுத்தப்பட்டபோதும் அதற்கு மாறான காரணங்களை மாநாட்டில் வைத்தே புலிகளின் பிரதிநிதி விளக்கியிருந்தார்.

ஆனால், காரணங்களையும் நியாயங்களையும் ஆராய்ந்து தீர்ப்புச் சொல்லும் உலகம் இதுவல்ல. புவி

**- கலைவாணன் -**

சார் அரசியலே அனைத்தையும் முடிவு செய்யும் யுகமாக இது மாறிவிட்டதை சம்பவங்கள் காட்டுகின்றன.

இந்நிலையில், புலிகளிடம் இருந்து ஆயுதங்களை களைவதெப்படி? ஆயுதங்களை அவர்கள் கைவிடமாட்டார்கள் என்ற நிலையில் அவற்றைப் பயன்படுத்துவதையாவது தடுப்பது எவ்வாறு?

### பாலசிங்கம் கருத்து

ஆயுதங்களை வைத்திருப்பதால் தான் எம்மை அழைத்துப் பேசுகிறார்கள் என்று அன்ரன் பாலசிங்கம் கூறியிருந்த நிலையில், அடுத்த நடவடிக்கை என்ன என்று பேரினவாதிகள் மூளையைக் குழப்பாமலில்லை.

சண்டையில் பறிக்கமுடியவில்லை. சமாதானப் பேச்சுகளில் பறிக்கமுடியவில்லை, இந்திய அமைதிப்படையினால் பறிக்கமுடியவில்லை, பணமும் பதவியும் காட்டிப் பறிக்கும் யோசனைக்கே இடமில்லை.

இந்தநிலையில், டோக்கியோ மாநாடு இத்திசையில் ஒரு வாய்ப்பை வழங்காதா என்று சர்வதேச தவதானிகள் சிந்திப்பதாக இருக்கலாம்.

### அமெரிக்க நிபந்தனைகள்

புலிகள் அமெரிக்காவின் பட்டியலில் பயங்கரவாதிகளாகவே உள்ளனர். அந்தப் பட்டியலில் இருந்து அவர்களின் பெயரை நீக்குவதற்கு புலிகள் சொல்லிலும் செயலிலும் பயங்கரவாதத்தைக் கைவிடவேண்டும் என்று அமெரிக்கா நிபந்தனை விதித்திருக்கிறது.

தடைசெய்யப்பட்ட இயக்கத்தின் பிரதிநிதி அமெரிக்க மண்ணில் கால் பதிக்க முடியாதென்பதால் அவர்கள் வாஷிங்ரன் மாநாட்டிற்கு அழைக்கப்படவில்லை.

பின்வபட்டிருக்கும் இலங்கை அரசாங்கத்தின் இன்றைய அரசியல் நெருக்கடி, தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுகள் முறிவடைய அனுமதிக்கக்கூடாது என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்தது. இலங்கைக்கு விஜயஞ்செய்த தெற்காசியப் பிராந்தியத்திற்கான பிரதி ராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரினா ரொக்கா தனது விஜயத்தின் இறுதியிலேயே அமெரிக்காவின் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சமாதான முயற்சிகளை சகவாழ்வு அரசியல் மூடிமறைக்கக் கூடிய ஆபத்து இருக்கிறது. சமாதானப் பேச்சுக்களை சகவாழ்வு அரசியல் பிணக்குத் தடுக்காது என்று நாம் நம்புகிறோம். அவர்கள் ஒன்றாக முன்னேறிச்செல்ல முடியும் எனவும் நம்புகிறோம்.

டோக்கியோவில் அடுத்த மாதம் நடத்தப்படும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தைப் பகிஷ்கரிக்கப் போவதாக விடுதலைப் புலிகள் கூறியிருப்பது சமாதான முயற்சிகளுக்கு ஒரு பெரும் சவாலாகும்.

புலிகள் இயக்கத்துடன் நான் பேச்சு நடத்தவில்லை. ஆயினும், எனது அரசாங்கத்தின் அறிவுரை மிகவும் தெளிவானதாகும். சமாதான முயற்சியினதும் தமிழ் மக்களினதும் நன்மைக்காக டோக்கியோ மாநாட்டில் புலிகள் பங்குபற்ற வேண்டும்.

வாஷிங்ரன் கூட்டத்துக்குப் புலிகள் அழைக்கப்படாதது சரியானதே. டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டுக்கு நல்ல அடித்தளத்தையிட வாஷிங்ரன் கூட்டம் உதவியது. புலிகள் இயக்கம் மனித உரிமைகளையும் ஜனநாயகத்தையும் மதிக்க வேண்டும்.

இலங்கையின் சமாதான முன்னெடுப்புகள் நாளுக்குநாள் பலம் பெற்று வருகின்றன. இந்த அர்ப்பணிப்புக்காக இலங்கை மக்களுக்கும் அவர்களின் சமரசப் பேச்சாளர்களுக்கும் எனது அரசின் பாராட்டையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானம் நிலைநிறுத்தப்படும் ஒரு நாளை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம். அதற்காக எமது நாடு சகல வழிகளிலும் உதவத் தயாராக இருக்கின்றது. வர்த்தக, வாணிப, கல்வி, கலாசாரம் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பாக எமது இரு நாடுகளுக்கிடையிலான உறவில் மீண்டும் கவனம் செலுத்த முடியும்.

இலங்கையின் சமாதான முயற்சிகள் முன்னேறினாலேயே இவையனைத்தும் சாத்தியமாகும்.

- இவ்வாறு அவர் கூறினார்.

புலிகள் தமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்வார்கள். அவர்கள் போரில் ஈடுபடாமல் நிதியுதவிகளை அபிவிருத்திக்குப் பயன்படுத்துவார்கள் என்று அமெரிக்கா ஏனைய நாடுகளுக்கு பரிந்துரைக்கின்றது.

ஓர் அனுசரணையாளராகவோ, உத்தரவாதியாகவோகூட தன்னைக் காட்டிக்கொள்கிறதே.

டோக்கியோ மாநாட்டிற்கு புலிகள் செல்வார்களா என்பதை இவற்றின் பின்னணியிலேயே ஆராய வேண்டியிருக்கிறது.

ஆயினும், ஆயுதங்களைக் கைவிடக்கூடிய சந்தர்ப்பம் இன்னும் வந்து விடவில்லை என்றே புலிகள் தெரி விக்கின்றார்கள். ★

## வெசாக்கையொட்டி உணவுப் பொட்டலம் அன்பளிப்பு

வடமாட்சி,மே22

வெசாக் தினத்தை முன்னிட்டு கரவெட்டி வதிரி பரமானந்தா ஆச்சிரமத்தில் தங்கியுள்ள சிறுவர்களுக்கும், முதியவர்களுக்கும் உணவுப் பொட்டலங்களை நெல்லியடிப் பொலீஸார் அண்மையில் வழங்கினார்கள்.

அத்துடன், சிறுவர்களுக்குத் தேவையான பாடசாலை உபகரணங்களையும் அவர்கள் வழங்கினார்கள்.

இதுதவிர, ஆச்சிரமத்தில் உள்ள விநாயகர் ஆலயத்தில் நாட்டில் சமாதானம் வேண்டி பிரார்த்தித்து விசேட பூசைகளும் நடத்தப்பட்டன.

இவ்வைபவங்களில் யாழ்.சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஏ.அன்ரன், பொலீஸ் அத்தியட்சகர் ஹெக்டர் தர்மஸ்ரீ யாழ்.உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் த.பி.ஜெயசிங்க, வடமராட்சி உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் டியிரேமரத்ன, நெல்லியடி பொலீஸ் இன்ஸ்பெக்டர் எஸ்.தர்மராசா, ஆச்சிரம பொதுமுகாமையாளர் எஸ்.தில்லைநாயகம் ஆகியோர் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-173)

## வதிவிடப் பயிற்சி கருத்தரங்கு

வலி.தெற்கு,மே22

வட இலங்கை சங்கீத சபையினரால் நடத்தப்படும் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கான வதிவிட பயிற்சிக் கருத்தரங்கொன்றினை நாளை வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடத்த வட இலங்கை சங்கீத சபை ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ள 5ஆம், 6ஆம் தரங்களுக்கான பரீட்சார்த்திகளுக்கான இப்பயிற்சிக் கருத்தரங்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இம்மூன்று நாள்களும் இவர்கள் இக்கல்லூரியில் தங்கியிருந்தே பயிற்சியில் ஈடுபடவேண்டுமாகையால் அதற்கேற்ற ஆயத்தங்களுடன் வருகைதர வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-152)

# களுத்துறையில் மழை இல்லை ஆனால் வெள்ளத்தால் பாதிப்பு!

கொழும்பு,மே.22

களுத்துறையில் மழையில்லை ஆனால், இதர பகுதிகளில் இருந்து வழிந்தோடும் வெள்ளத்தால் அப்பிரதேசம் பாரிய அழிவை எதிர்நோக்கியுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தத்தினால் 24 ஆயிரம் மக்கள் வீடுகளை இழந்து அகதிகளாக விகாரைகளிலும், பாடசாலைகளிலும் தஞ்சம் அடைந்துள்ளனர். வெள்ளப் பெருக்கினால் மரணங்கள் சம்பவிக்கவில்லை. எனினும், வெள்ளத்தை பார்வையிடச் சென்ற இருவர் தொடங்கொட, களுத்துறைப் பகுதிகளில் வெள்ளத்தில் அகப்பட்டு உயிரிழந்துள்ளனர்.

மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கோட்டையில் உள்ள அமைச்சின் கேட்போர் கூடத்தில் களுத்துறை வெள்ள நிலைமை தொடர்பாக நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சின் செயலாளர் குமார் ரூபசிங்க அரச திணைக்கள அதிகாரிகள், களுத்துறை மாவட்ட மாகாணசபை உறுப்பினர் ஏ.எம். யூஸும் முதலானோர் கலந்துகொண்ட மாநாட்டில் அமைச்சர் மேலும் கூறியதாவது:-

வெள்ளத்தினால் களுத்துறை மாவட்டம் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. மத்துகம, புளத்சிங்கள, ஹொரண முதலான இடங்களில் வெள்ளநீர் அதிகரித்தவாறே உள்ளது. இங்கு 800 வீடுகள்வரை நீரில மூழ்கியுள்ளன.

வெள்ளத்தில் இருந்து மக்களை மீட்கும் பணிகளில் கடற்படையினரினதும், மீனவர்களினதும் 30 படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. சில இடங்களுக்கு படகுகளில் செல்லமுடியாத நிலையில் விமானப் படையின் உதவியுடன் மீட்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பரவலாக ஏற்பட்ட வெள்ளத்தினால் நாடெங்கும் 5000 தொலைபேசிகள் பாதிப்படைந்துள்ளன. 30 தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையங்கள் செயலிழந்துள்ளன. 23 துபால் கந்தோர்கள் நீரில் மூழ்கியுள்ளன.

முழுச்சேத விவரங்களும் இன்னும் மதிப்பிடமுடியாதநிலையில் உள்ளன.

அசுத்தநீரினால் மக்களுக்கு தொற்று நோய்கள் ஏற்படாதிருக்க சுகாதார அமைச்சும் சமூகசேவை அமைச்சும் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ள களுத்துறை மாவட்ட மக்களுக்கு அவசர அரிசி, பருப்பு, பால்மா, மா, பாண் முதலான உணவு வகைகள் அவசர தேவையாக உள்ளன. அவர்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளனர். போத்தல்களில் அடைக்கப்பட்ட தண்ணீரையே பாதிக்கப்பட்டோர் அருந்தவேண்டி உள்ளது.

பல தனியார் நிறுவனங்கள் வெள்ள நிவாரண உதவிகளை காசோலைகளாகவும், உணவுவகைகளாகவும் வழங்கியுள்ளன. இவை பலலட்சம் ரூபா பெறுமதியானதாகும்.

ரெலிகொம், மொபிட்டல், லேக்கவுஸ் நிறுவனங்கள் தாராளமாக வெள்ள நிவாரணத்துக்கு நிதியுதவி செய்துள்ளன - என்றார். (ஒ)


முதலாவது

பிறந்ததின வாழ்த்து

HAPPY



BIRTHDAY

செல்வி கீர்த்தனா

வேலணை வடக்கைச் சேர்ந்த கண்ணன் - விஜயலட்சுமி தம்பதிகளின் செல்வப்புதல்வி செல்வி கீர்த்தனா

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (22.05.2003) வியாழக்கிழமை பிரான்ஸில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

செல்வி கீர்த்தனாவை அன்பு அப்பா, அம்மா, நாரந்தனை மாமி, மாமா, மச்சான்மாரான பானு, பவன், அத்தை இந்து, அப்பப்பா, யாழ்ப்பாணத்திலிருக்கும் அம்மம்மா இராசம்மா, பெரியம்மாமார், பெரியப்பாமார், அக்காமார், அண்ணாமார், லண்டனிலிருக்கும் அத்தை பரா, மாமா செல்வா, மச்சான் தருண் குட்டி மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் எல்லாம்வல்ல இறைவன் அருளால் பல்கலைகளும் சிறப்ப பல்லாண்டு காலம் நலமுடன் வாழவேண்டுமென்று உளமார வாழ்த்துகின்றார்கள்.

நாரந்தனை. (17955) திரு வே.தம்பிநாயகம் (அப்பப்பா)



நினைவலைகள்

முதலாம் ஆண்டு 10ஆம் ஆண்டு



நாராணி நகேந்திரன்



திருமதி நகேந்திரன் ஆசைப்பிள்ளை

11.03.1918 ← பிறப்பு → 03.06.1927

03.06.2002 ← இறப்பு → 21.06.1993

திதி: அட்டமி திதி: துதியை

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தவரே!
ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் உங்கள்
நினைவுகளும், பாசமும், கண்ணியமும் - என்றும்
எம்மை விட்டகலாது.........!

இவர்களது ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (23.05.2003) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

அரசடி வீதி,
நவாலி. (18183)

- பிள்ளைகள் -
நா.தவராஜசேகரன்.

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

ஜோதிட சாஸ்திரத்தின்படி சனி, ராகு, கேது, குரு ஆகிய கிரகங்கள்தான் ஒரு ராசியில் அதிக நாள்கள் இருக்கிறார்கள். எனவேதான் இந்த கிரகங்களின் பெயர்ச்சி மட்டும் மிக முக்கியத்துவம் பெறுகிறது. இப்போது சனிப்பெயர்ச்சி வாக்கிய பஞ்சாங்கப்படி 2003 ஆம் ஆண்டு மே 22 ஆந் திகதி நிகழ்கிறது. அப்போது அவர் இடப ராசியில் இருந்து மிதுன ராசிக்கு செல்கிறார். இங்கு அவர் 2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முடிய இருக்கிறார். திருக்கணித பஞ்சாங்கப்படி சனிப்பெயர்ச்சி 2003 ஜூலை மாதம் 23 ஆந் திகதி நிகழ்ந்தாலும் வாக்கிய பஞ்சாங்கப்படி தற்போது தான் நிகழ்கிறது. சனீஸ்வரன் கோயிலுக்கு புகழ்பெற்ற தமிழகத்தின் திருநள்ளாறில் இந்த வாக்கிய பஞ்சாங்கப்படிதான் சனிப் பெயர்ச்சி விழா கொண்டாடப்படுகிறது.

அதன்படியே வாக்கிய பஞ்சாங்கத்தை கணக்கில் எடுத்துக்கொண்டு இந்த பலன் கணிக்கப்பட்டுள்ளது. சனி மிதுன ராசியில் இருக்கும் காலத்தில் குருபகவான் இரு முறையும் ராகுகேது இரு முறையும் இடமாறுகிறார்கள். குரு பகவான் 23-07-2003 அன்று கடக ராசியில் இருந்து சிம்ம ராசிக்கு செல்கிறார். அதன்பின் 15-08-2004 அன்று சிம்ம ராசியில் இருந்து கடக ராசிக்கு செல்கிறார். ராகு, கேது பெயர்ச்சி முதலில் 18-08-2003 அன்று நிகழ்கிறது. அப்போது ராகு இடப ராசியில் இருந்து மேடராசிக்கும் கேது, விருச்சிக ராசியில் இந்து துலாம் ராசிக்கும் மாறுகிறார்கள்.

அதன் பின் 05-02-2005 அன்று ராகு, கேது பெயர்ச்சி நிகழ்கிறது. அப்போது ராகு மேட ராசியில் இருந்து மீன ராசிக்கும், கேது, துலாம் ராசியில் இருந்து கன்னி ராசிக்கும் மாறுகிறார்கள். மேற்கண்ட கிரகங்கள் மாறுதலையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தான் இந்த சனிப்பெயர்ச்சி பலன் கணிக்கப்பட்டுள்ளது.



## மேடம்

மேட ராசி அன்பர்களே! கடந்த காலங்களில் சனி மட்டுமன்றி முக்கிய கிரகங்களான குரு, ராகு மற்றும் கேது ஆகிய எதுவுமே நன்மை தரும் இடத்தில் இல்லை. சனியால் பொருளாதார இழப்பும் பணத் தட்டுப்பாடும் இருந்திருக்கும். குடும்பத்திலும் பல்வேறு பிரச்சினைகள் தலைதூக்கி இருக்கும். சிலர் குடும்பத்தை விட்டே பிரிந்து சென்றிருக்கக்கூடும். குருபகவானும் தம்பதியினரிடையே பிணக்குகளை தந்திருப்பார். ராகுவும் சனியைப் போலவே இடையூறுகளை கொடுத்திருப்பார். கேது உடல்நலத்தை பாதிப்படைய செய்திருப்பார். இந்த நிலையில் சனி சாதகமான இடத்துக்கு வருகிறார். சனி 2ஆம் இடத்தில் இருந்து 3ஆம் இடத்துக்கு செல்வதால் ஏழரைச் சனிகாலம் முடிவுக்கு வந்துவிட்டது. உங்கள் பிரச்சினைகள் அனைத்தும் படிப்படியாக மறையும். மேலும் 23-07-2003 அன்று குரு பகவான் நன்மை தரும் இடத்துக்கு வருவார்.

உங்களுக்கு பல்வேறு காரியத்தில் அவர் வெற்றியை தேடித்தருவார். கணவன் மனைவி இடையே இருந்த பிணக்குகள் நீங்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். நீண்ட நாள்களாக தடைப்பட்டு வந்த திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் ஜூலை மாதத்திற்கு பிறகு கைகூடும். உத்தியோகம் பார்ப்பவர்கள் ஜூலை மாதத்திற்கு பிறகு குருவின் பலத்தால் மேலும் சிறப்படைவீர்கள். இதுவரை கிடைக்காமல் இருந்த பதவி உயர்வு கிடைக்கும். வேலை இன்றி இருந்தவர்களுக்கு வேலை கிடைக்க வாய்ப்பு உண்டு. 2004 ஒகஸ்ட் மாதத்திற்கு பிறகு வேலைப்பளு அதிகரிக்கும். வியாபாரிகளின் நிலை இனி மேம்படும். பணப்புழக்கம் இருக்கும். இரும்பு தொடர்பான தொழில் தொடக்க காலத்தில் இருந்து முன்னேற்ற பலனை கொடுக்கும். மற்ற தொழில்கள் 2003 ஜூலைக்கு பிறகு வளர்ச்சியை தரும். கலைஞர்கள் நல்ல புகழையும், பெயரையும் கிடைக்கப் பெறுவர். வறுமையில் வாடிய கலைஞர்கள் நல்ல பண வரவை காண்பர். அரசியல்வாதிகள், பொது நல சேவை செய்பவர்களுக்கு புதிய பதவி கிடைக்கப் பெறலாம்.

சட்டத்தரணிகள், ஆசிரியர்கள் தொழிலில் வளர்ச்சி காண்பர். குறிப்பாக ஜூலைக்கு பிறகு முன்னேற்றமான சம்பவங்கள் நடக்கும். மாணவர்கள் கடந்த ஆண்டு இருந்த பின்தங்கிய நிலை மாறும். இந்த ஆண்டு விரும்பிய பாடம் கிடைக்கலாம். 2004/2005 கல்வி ஆண்டில் சிரத்தை எடுத்து படிக்க வேண்டியிருக்கும். விவசாயிகள் சிறப்பான வருமானம் பெறுவர். குறிப்பாக கரும்பு, எள் போன்றவற்றில் உடனடி பலனை பெறலாம். மற்ற பயிர்கள் ஜூலை மாதத்திற்கு பிறகு நல்ல விளைச்சலைக் கொடுக்கும். வழக்கு விவகாரங்கள் திருப்திகரமாக இருக்கும். தற்போது கேது சாதகமற்ற நிலையில் இருப்பதால் பித்தமயக்கம், காசநோய் மற்றும் உஷ்ணம் தொடர்பான உபாதைகள் வரலாம். அதேநேரம் இந்த நோய்கள் அனைத்தும் 2005 பெப்ரவரிக்கு பின்னர் பூரண குணம் அடையும்.

### 2003 மே முதல் 2003 ஜூலை வரை

சனி பகவானால் பல்வேறு நற்பலன்கள் கிடைப்பதை யாராலும் தடுக்க முடியாது. மற்ற முக்கிய கிரகங்கள் திருப்திகரமாக இல்லை.ஆனாலும் பொருளாதார வளம் சனியால் சிறப்பாகவே இருக்கும். வியாபாரம் வளர்ச்சி அடையும். லாபம் அதிகரிக்கும். உத்தியோகம் பார்ப்பவர்கள் திருப்தி கண்டாலும் வேலைப்பளு அதிகமாகவே இருக்கும். குடும்பத்தில் முன்னேற்ற சம்பவங்கள் நடக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். ஆனால், தம்பதியினர் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து போகவும். உறவினர்கள் வகையில் சுமாரான போக்கே இருக்கும். கலைஞர்கள் பணப்புழக்கத்தில் இருப்பர். ஆனால், தொழிலில் எதிர்பார்த்த மன நிம்மதி இருக்காது. அரசியல்வாதிகள் பிரதிபலனை பாராது உழைப்பை மட்டுமே சிந்த வேண்டியதிருக்கும். மாணவர்கள் கடுமையாக படிக்க வேண்டியிருக்கும். மேல்படிப்பில் விரும்பிய பாடம் கிடைக்க அதிகமாக பாடுபட வேண்டும். கஷ்டப்பட்டு மேல் படிப்பில் இடம்பெற்று விட்டால் அதில் கரை சேர்ந்து விடுவீர்கள்.

### 2003 ஒகஸ்ட் முதல் 2004 ஒகஸ்ட் வரை


சிறப்பான காலம். குரு பகவான் 5ஆம் இடத்துக்கு வந்துவிட்டார். குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த ஒருசில பிரச்சினையும் இனி இருக்காது. மேலும் கடந்த காலத்தில் சனி சிலருக்கு வேதையின் அடிப்படையில் நன்மை தர முடியாமல் இருந்து இருப்பார். அப்போது அந்த வேதையில் இருந்து விடுபட்டுவிட்டார். அதனால் சனியின் முழு பலனை பெறலாம். வீட்டில் முழு நிம்மதி ஏற்படும். ஆனந்தம் அதிகரிக்கும். திருமண பேச்சு வெற்றிகரமாக அமையும். தடைப்பட்டு வந்த திருமணம் கைகூடும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். வீடு மனை வாங்க இது அனுகூலமான காலம். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு தடைகள் அகன்று முன்னேற்றம் கிடைக்கும். பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். மேல் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். விரும்பிய இடத்துக்கு மாற்றம் பெறலாம். வியாபாரம் சிறக்கும். எல்லா வகையான தொழிலிலும் லாபத்தைக் காணலாம். கேது சாதகமற்ற நிலையில் இருப்பதால் பகைவர்களின் இடையூறு அவ்வப்போது வரலாம். ஆனால், அதை முறியடிக்கும் வல்லமை உங்களுக்கு உண்டு. கலைஞர்கள் புதிய ஒப்பந்தத்தோடு புகழ் பாராட்டு கிடைக்கப் பெறுவர். அரசிடம் இருந்து விருது கிடைக்க வாய்ப்பு உண்டு. உஷ்ணம், பித்தம், மயக்கம், காசநோய் போன்றவை பூரண குணம் அடையும். விபத்து பயம் அடியோடு நீங்கும். ராகுவால் சிறு சிறு உபாதைகள் வந்தாலும் பாதிப்பு ஏதும் ஏற்படாது.

### 2004 செப்ரெம்பர் முதல் 2005 ஜனவரி வரை

குரு 6ஆம் இடத்திற்கு சென்று விடுவார். இது சாதகமான இடம் அல்ல. அவரால் இதுவரை கிடைத்து வந்த நற்பலன்கள் இனி கிடைப்பது அரிது. அதே நேரம் சனியால் கிடைக்கும் பலன்களில் எந்த தடையும் இல்லை. எனவே பொருளாதார வளம் தொடர்ந்து சிறப்பாக இருக்கும். திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் சற்று தாமதம் ஆகலாம். மனைவி வகையில் சிற்சில மனக்கசப்புகள் வரலாம். ஆனால், குரு சாதகமற்ற நிலையில் இருந்தாலும் அவரது 9ஆவது இடத்துப் பார்வை சாதகமாக அமையும். அந்த பார்வையால் உங்களுக்கு வரும் எந்த இடையூறையும் தடுத்து நிறுத்திவிடலாம். உத்தியோகம் பார்ப்பவர்கள் கடந்த காலத்தை விட சற்று அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். வியாபாரம் தொடர்ந்து சிறப்பைத் தரும். புதிய வியாபாரம் அனுகூலத்தை கொடுக்கும். கலைஞர்கள் நல்ல வருவாயைக் காணலாம். ஆனால், எதிர்பார்த்த புகழ், பாராட்டு கிடைப்பதில் தாமதம் ஆகலாம். மாணவர்கள் அதிக சிரத்தை எடுத்து படிக்க வேண்டியிருக்கும். உடல் நலம் கடந்த காலம் போலவே சிறப்பாக இருக்கும்.

### 2005 பெப்ரவரி முதல் 2005 ஜூன் வரை

மிகச் சிறப்பான காலமாக இது இருக்கும். கேது 7ஆம் இடத்தில் இருந்து 6ஆம் இடத்திற்கு வந்துவிட்டார். இதனால் பகைவர்களின் தொல்லை அடியோடு மறையும். உங்களுக்கு எதிராக செயற்பட்டவர்கள் தவறை உணர்ந்து சரண் அடைவர். மேலும் தற்போது குருவுக்கு வேதையாக கேது வந்துவிட்டார். எனவே குரு சாதகமற்ற நிலையில் இருந்தாலும் அவரால் கெடு பலன்கள் வராது. பொருளாதார வளம் மிகவும் சிறப்பாக இருக்கும். எந்தக் காரியத்தையும் துணிந்து செயற்படுத்தலாம். தொட்டதெல்லாம் பொன்னாகும். ராகு 12ஆம் இடத்திற்கு சென்று இருப்பது சுமாரான நிலைதான். ஆனாலும் உங்கள் ராசியில் இருந்தபோது அவரால் வந்த வீண் விரோதம் இனி வராது. 12ஆம் இடத்தில் ராகு சிற்சில தடைகளை தரலாம். ஆனால், அதை குருவின் பார்வையால் முறியடிக்கலாம். இது தவிர கேது உங்கள் குடும்ப நிலையை மேலும் உயர்த்துவார். மனைவி வகையில் இருந்து வந்த பிணக்குகள் அடியோடு மறையும். கலகலப்பு அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை கிடைக்கும். உத்தியோகம் தொடர்ந்து சிறப்பான நிலையில் இருக்கும். சிலர் வேலை பார்த்துக்கொண்டே பக்கத் தொழிலில் ஈடுபடலாம். அதன் மூலம் மேலும் முன்னேற்றம் காணலாம். மாணவர்கள் முயற்சி எடுத்து படிக்க வேண்டியிருக்கும்.



## இடபம்

ஏழரை நாட்டு சனியின் பிடியில் சிக்கி நீங்கள் எண்ணற்ற துன்பங்களை அனுபவித்து வந்து கொண்டிருப்பீர்கள். தற்போது சனி உங்கள் ராசியில் இருந்து 2ஆம் இடத்துக்கு சென்றுள்ளார். அவர் உங்கள் ராசியில் இருக்கும் போது, அதிக அலைச்சலை உருவாக்கி இருப்பார். வேலைப்பளு அதிகமாக இருந்திருக்கும். உறவினர்கள் வகையில் அனுகூலமான போக்கு இருந்திருக்காது. இனி இந்த இடர்பாடுகள் இருக்காது. அதே நேரம் சனி 2ஆம் இடத்திற்கு செல்வது சாதகமான நிலை என்று சொல்ல முடியாது. இந்த இடத்தில் அவர் குடும்பத்தில் பிரச்சினைகள் உருவாக்குவார். பொருள்களை களவு கொடுக்க நேரிடும்.

பொருளாதார இழப்பு ஏற்படும். இது பொதுவான விதி. ஆனால் இது ஏழரை சனியின் இறுதிக்கட்டம் என்பதால் அவர் அதிக பளுவை கொடுத்தாலும் அதற்கான பலனையும் தரத் தயங்கமாட்டார். மேலும் சனியை தவிர மற்றைய முக்கிய கிரகங்களான குரு, ராகு கேதுவால் அவ்வப்போது நன்மை கிடைக்க வாய்ப்பு உண்டு. அதாவது கேது 2003 ஒகஸ்டுக்கு பிறகும் குரு 2004 ஒகஸ்டுக்கு பிறகும் ராகு 2005 பெப்ரவரிக்கு பிறகும் நன்மை தருவார்கள். தற்போது எந்த காரியத்தையும் அதிக சிரத்தை எடுத்தே முடிக்க வேண்டியிருக்கும். ஆனால், ஒகஸ்ட் மாதத்திற்கு பிறகு காரிய அனுகூலம் ஏற்படும். பொருளாதார வளத்தில் மேம்பாடு காணலாம். உங்களுக்கு இருந்து வந்த பொல்லாப்பு மறையும். மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். குடும்பத்தில் தொடக்க காலத்தில் சிற்சில பிரச்சினைகளை சந்திக்க வேண்டியிருக்கும். 2003 ஒகஸ்டுக்கு பிறகும் வீட்டிற்கு தேவையான வசதிகள் அதிகரிக்கும். முயற்சி எடுத்தால் புதிய வீடு வாகனம் வாங்கலாம்.

2004 ஒகஸ்டுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தம்பதியினரிடையே கருத்து வேறுபாடு மறையும். பிரிந்த குடும்பம் ஒன்றுசேரும். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் கைகூடும். சிலர் குழந்தை பாக்கியம் பெறுவர். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு தொடக்கத்தில் உழைப்புக்கு தகுந்த பணவரவு இருக்கும்.

13 ஒகஸ்ட் முதல் 2004 ஜூலை வரை எதிலும் அதிக முயற்சி எடுக்க வேண்டியிருக்கும். அதன்பின் உங்கள் வாழ்க்கையில் வசந்தம் வீசத் தொடங்கும். தடைப்பட்டு இருந்த பதவி கிடைக்கும். வியாபாரிகள் அயராத உழைப்புக்கு தகுந்த பலன் மட்டுமே கிடைக்கப் பெறுவர். நஷ்டத்தில் தவித்துக் கொண்டு இருந்தவர்கள் 2003 ஒகஸ்ட் மாதத்தில் இருந்து நல்ல வருமானத்தை காணலாம்.

எந்தத் தொழிலிலும் அதிக முதலீடு செய்ய வேண்டாம். புதிய தொழில் தொடங்குவதை விட இருப்பதை சிறப்பாக நடத்த முயற்சி எடுக்கவும். 2005ஆம் ஆண்டில் உள்ள முன்னேற்றத்திற்கு பெண்கள் மிகவும் உதவிகரமாக இருப்பர். கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்கள் பெற சற்று முயற்சியின் பேரில் கிடைக்கப் பெறலாம். மாணவர்களும் உழைப்புக்கு ஏற்ற பலன்கள் பெறுவர். 2004 ஒகஸ்ட் மாதத்திற்கு பிறகு படிப்பில் வெகு முன்னேற்றத்தை பெறுவீர்கள். உடல் நலம் சுமாராக இருக்கும். கேதுவால் ஒகஸ்ட் மாதத்திற்கு பிறகு பித்தம், மயக்கம், உஷ்ணம் தொடர்பான பிரச்சினை வரலாம். சிறுஉபாதை என்றாலும் உடனடியாக சிகிச்சை பெற்று முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவும். 2005 பெப்ரவரிக்கு பிறகு உடல் நலம் பூரண குணம் ஆகும்.

### 2003 மே முதல் 2003 ஜூலை வரை

இந்த காலகட்டத்தில் முக்கிய கிரகங்கள் எதுவும் சாதகமற்ற நிலையில்தான் இருக்கும். ஆனால் குருவின் அனைத்துப் பார்வைகளும் சிறப்பாகக் காணப்படுகிறது. எந்த இடையூறையும் முறியடிக்கும் வல்லமையை பெறுவீர்கள். எடுத்த காரியத்தையும் அதிக சிரத்தை எடுத்தே முடிக்க வேண்டியிருக்கும். பணப்புழக்கம் இருக்கும். கணவன் மனைவி இடையே பிணக்குகள் வரலாம். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து போகவும், உத்தியோகம் பார்ப்பவர்கள் சற்று கவனமாக இருக்க வேண்டும். வேலைப்பளு அதிகரிக்கும். சிலர் வேலை விடயமாக குடும்பத்தை விட்டு தற்காலிகமாக பிரிய வேண்டியிருக்கும். வியாபாரம் சீராக நடக்கும். அதிக அலைச்சல் இருக்கும். சிலருக்கு உழைப்புக்கு ஏற்ற வருமானம் கிடைக்காது. மாணவர்கள் சுமாரான பலனை காணலாம். விவசாயத்தில் உழைப்புக்குத் தகுந்த வருமானம் கிடைப்பது அரிது. கேதுவால் சிறுசிறு உபாதைகள் வரலாம். அதனால் பெரிய பாதிப்பு வராது.

### 2003 ஒகஸ்ட் முதல் 2004 ஒகஸ்ட் வரை

குரு 4ஆம் இடத்திற்கு செல்கிறார். இது சிறப்பான இடம் அல்ல. குருவின் பார்வைகளும் சாதகமாக இருக்காது. ஆனால், கேது 6ஆம் இடத்திற்குவந்து விடுவார். இது சிறப்பான நிலை. ராகு உங்கள் ராசிக்கு 12ஆம் இடத்தில் நிற்பார். கேது நன்மை தரும்போது ராகுவால் நற்பலனை கொடுக்க முடியாது. கேது பொருளாதார வளத்தைக் கொடுப்பார். பகைவர்களின் இடையூறு இருக்குமிடம் தெரியாமல் போகும். இதனால் வியாபாரம் தங்கு தடையின்றி நடக்கும். குடும்பத்தின் நிலை சிறக்கும். மனைவி வகையில் இருந்து வந்த பிணக்குகள் மறைந்து ஒற்றுமை ஏற்படும். உறவினர்கள் வகையில் அவ்வளவு அனுகூலம் இருக்காது. சற்று ஒதுங்கி இருக்கவும். உத்தியோகஸ்தர்கள் அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். இடமாற்ற பீதி தொடரும். கலைஞர்கள் நல்ல வருவாயைப் பெறுவர். ஆனால் எதிர்பார்த்த புகழ், பாராட்டு கிடைப்பது அரிது. மாணவர்கள் கடந்த ஆண்டை விட சிரத்தை எடுத்து படிக்க வேண்டும். உடல் நலம் சிறப்பாகும்.

### 2004 செப்ரெம்பர் முதல் 2005 ஜனவரி வரை

அதிக குதூகல பலன்கள் நடக்கும். குரு 5ஆம் இடத்திற்கு வந்து பல்வேறு நன்மைகளை தருவார். மேலும் கேதுவின் நற்பலனும் தொடரும். உறவினர்கள் வகையில் இருந்து வந்த பிரச்சினை மறையும். ஒற்றுமை ஏற்படும். தடைப்பட்டு வந்த திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் கைகூடும். சிலர் சற்று முயற்சி எடுத்து புதிய வீடுமனை வாங்க யோகம் உண்டு. உத்தியோகம் பார்ப்பவர்கள் சிறந்த நிலையை அடைவர். வேலையை இழந்தவர்கள் மீண்டும் வேலை கிடைக்கப்பெறுவர். அல்லது நல்ல தொழில் தொடங்கலாம். வியாபாரம் சிறப்பாக இருக்கும். சிறப்பான பணப்புழக்கம் இருக்கும். கலைஞர்கள் பணப்புழக்கத்தோடு நற்புகழும் கிடைக்க பெறலாம். அரசியல்வாதிகள் எதிர்பார்த்த பதவி கிடைக்க பெறுவர். மாணவர்கள் பின்தங்கிய நிலையில் இருந்து விடுபடுவர். உடல் நலம் மேலும் சிறப்படையும்.

### 2005 பெப்ரவரி முதல் 2005 ஜூன் வரை

கேது 6இல் இருந்து 5ஆம் இடத்திற்கு வந்துவிட்டார். இது சாதகமற்ற நிலையே. ஆனால் ராகு சாதகமான இடத்திற்கு வந்துவிட்டார். அவர் 12ஆம் இடத்தில் இருந்து 11ஆம் இடத்திற்கு அடியெடுத்து வைத்துவிட்டதால் பகைவர்களின் இடையூறுகள் அடியோடு மறையும். வியாபாரத்தில் எதிர்ப்பு இன்றி முன்னேறலாம். தொழிலில் இருந்த பிற்போக்கான நிலை மறையும். லாபம் அதிகரிக்கும். சிலர் தீயோருடன் சேர்ந்து பணத்தை விரயமாக்கலாம். திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகள் நடக்கும். உத்தியோகம் பார்ப்பவர்கள் தொடர்ந்து சிறப்பான நிலையில் இருப்பர். கலைஞர்கள், பெண்களால் முன்னேற்றத்தை காணலாம். மாணவர்கள் சிறப்பான நிலையை பெறலாம். உடல் நலம் சுமாராக இருக்கும். வயிறு தொடர்பான உபாதைகள் வரலாம். பயணத்தின் போது சற்று கவனமாக இருக்கவும்.

(வளரும்)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## காணி விற்பனைக்கு

அல்லாரை தெற்கு, மீசாலையில் இரண்டு அறைகள், கிணறு, குசினியோடு 4பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்புகொள்ளவும். த.தங்கராசா, அல்லாரை தெற்கு, மீசாலை. (சி-28012)

## காணி தேவை

திருநெல்வேலி - நல்லூர் பிரதேசத்திற்குள் 11/2 பரப்பு முதல் 3 பரப்பு வரையிலான காணி தேவை. காலை 9 மணிமுதல் 5 மணிவரை. தொடர்பு: 021 222 2693 (187220)

## வீடு தேவை

Alliance Francias - French மொழி கற்பிக்கும் பாடசாலைக்கு 4 அறைகள் கொண்ட வீடு யாழ்ப்பாணத்துக்கும் திருநெல்வேலிக்கும் இடையில் உடன் தேவை. விவரம் நேரில். தொடர்பு: திருமதி S.இராமநாதன், 232, கோயில் வீதி, நல்லூர். (18228)

## இன்று சனி மாற்றம்

சனிமாற்றம் ரூபா 15/- எங்கும் விற்பனையாகின்றது. இவ்வாண்டில் நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல், இராணுவ மாற்றங்களை உண்டாக்கும். கணிப்பாசிரியர் Prof: சத்தியதாஸன் (சத்யா) (MECH. E.ELE.C)3ஆம் மைல், ஆனைக்கோட்டை. T.P.222-2753 (18255)

## வாடகைக்குண்டு

பிரதான வீதிக்கு அருகில் பற்றிக்ஸ வீதியில் தனியார் வெளிநாட்டு நிறுவனங்கள் இயங்கக் கூடிய மாடி வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: அபர்றிமா, இல.28, சென்.பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம். T.P No.222 5957 (18222)

## தவறிவிட்டது

வெள்ளவத்தை, தொடர்மாடி, ரோகினி வீதியைச் சேர்ந்த சிவராஜப்பிள்ளை சிவஜன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல. 831280271V), மல்லாகத்துக்கும் சுன்னாகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுததவர்கள் ச.பாலச்சந்திரன், பங்களா ஒழுங்கை, மல்லாகம் என்ற முகவரியில் ஒப்படைத்து தவவும். (18242)

20-05-2003ஆம் திகதி முகமாலைக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் பெறுமதிவாய்ந்த பொருள்களுடன் பயணப் பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து த.சிதம்பரநாதன, 139, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (18240)

இராஜசேகரன் வளர்மதி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (655930795V), விசேட அடையாள அட்டை (0907010611) மற்றும் வங்கிப் புத்தகம் (5002126046347) என்பன யாழ்நகருக்கும் குளப்பிட்டிச் சந்திக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும் C/o செல்லத்தம்பி, சேச் ஒழுங்கை, கொக்குவில். (18216)

## வாடகைக்கு

இல.767, மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம், யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல்ய தனியார் வைத்தியசாலை தொலைபேசி அற்றாஜ் பாத்றூம் சவர், சகல தொகுதிக்கும் மின் விசிறியும் அதே வசதியுடைய றம்மிய சூழலில் அமைந்த 4 வாகனத் தரிப்பிட வசதிகளுடனான பெரிய வீடும் 3 கடைத் தொகுதிகளும் வாடகைக்கு உண்டு. தொடர்பு நேரில். (18260)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

கொண்டலடி ஞானவைரவர் சனசமூக நிலையத்தினால் பாலர் பாடசாலை கட்டட நிதிக்காக 20.05.2003 அன்று நிலைய முன்றிலில் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசு பெற்ற இலக்கங்களின் விவரம் வருமாறு:

முதலாம் பரிசு: 3921 துவிச்சக்கர வண்டி
இரண்டாம் பரிசு: 2417 ரேடியோ ரேப் செற்
மூன்றாம் பரிசு: 1917 பெற்றோல்மாக்ஸ்

ஆறுதல் பரிசில்களுக்கான இலக்கங்கள் வருமாறு:
2766, 2538, 0951, 3553, 1133,
3693, 0182, 2553, 1765, 0537

நிர்வாகம்
கொண்டலடி ஞானவைரவர் சனசமூக நிலையம்,
நல்லூர் வடக்கு.
(18230)

## இதயத்தின் ஆழத்தில் நீங்கா நினைவில் ஈராண்டு



மண் மகிழ 23 - 06 - 1922
விண் மகிழ 22 - 04 - 2001

### அமரர் மரியாம்பிள்ளை விக்ரர் (யாழ் ஜெயம்)

நீந்தத் தெரியாத நாம் ஆழ்கடலில் வீழ்ந்தது போல்
ஆழ்ந்தே திணறி அனுதினமும் அரற்றி அலறுகின்றோம்!
ஒரு நாள் மறுநாள் மற்றொருநாள் என்று ஓயாதே
வருநாள் வந்தே எம் நெஞ்சத்தை வாட்டி வதைத்தே
ஆண்டொன்று கடந்து இன்று ஈராண்டும் வந்ததுவே
ஈண்டுமை நினைந்து நிதம் எமது நிம்மதியும் பறந்ததுவே
துன்பங்கள் பலதோன்றி துயரங்கள் வரும் போதினிலே
இன்பங்கள் வருமென்றே எமக்கு நீர் உரைத்ததெல்லாம்
நெஞ்சினிலே நினைந்துருகி மனம் பதறி ஓடிவந்தோம்
பஞ்சினிலே தீப்பிடித்ததுபோல் உலகைவிட்டு ஓடிவிட்டீர்
உருகும் மனம் ஓய்வுபெற பரம்பொருளான கிறிஸ்து யேசுவே!
பெருமனது கொண்டு எம்மைத் தேற்றியருள்வீராக!
ஐயா! எம் இதயமணிமாளிகையில் நீங்கள் என்றும் வாழ்வீர்கள்!

67, வேம்படி வீதி, யாழ்ப்பாணம். - குடும்பத்தினர். (18245)

## விற்பனையாளர் தேவை

ஆங்கில மருந்து விற்பனையில் அனுபவம் வாய்ந்த விற்பனையாளர் தேவை.

தொடர்பு:
**ஆதவன் மருந்தகம்**
கைதடிச் சந்தி,
கைதடி.
(18259)

## வேலையாள் தேவை

புடைவை வியாபாரத்தில் நல்ல அனுபவம் வாய்ந்த ஆண் விற்பனையாளர் தேவை.
உடனே நேரில் வரவும்.

**மிலேனியம் பெஷன் அன் பொம்பே பஸார்**
10,11, பெரியகடை வீதி
(மலாயன் கபே முன்பாக),
யாழ்ப்பாணம்.
(சி.28011)

## மாட்டு வண்டில் சவாரிப் போட்டி

இடம்: நீர்வேலி சவாரித்திடல்
காலம்: 25.05.2003 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: பிற்பகல் 2.00 மணி

குறிப்பு: புத்தூர் கிழக்கு பழைய குருநாதர் ஆலய கட்டட வளர்ச்சி நிதிக்காக இந்தப் போட்டி நடைபெறுகின்றது. யாழ். வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள சிறந்த காளைகளும் மோத இருக்கின்றன.

காணத்தவறாதீர்கள்

புத்தூர், கிழக்கு. ஆலய நிர்வாகிகள், பழைய குருநாதர் ஆலயம். (18235)

## கண்ணீர் அஞ்சலி

எமது பள்ளியின் பழைய மாணவியும் அபிவிருத்திச் சங்க உறுப்பினருமாகிய
**திருமதி தேவிகா சிவானந்தராசா**
அவர்களின் அன்புத் தந்தையார்
**காசிப்பிள்ளை மயில்வாகனம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்களின் திடீர் மறைவினால் ஆறாத்துயரில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு பள்ளிச் சமூகத்தின் சார்பில் அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய் சைவத்தமிழ் - பாடசாலை அபிவிருத்திச் சங்கம். வித்தியாலயம். (18246)

## ஒன்பதாவது வருட நினைவலைகள்







**அமரர் வே.சின்னத்தம்பி**
(முன்னாள் தலைவர், வலி.கி.தெ.பகுதி ப.நோ.கூ.சங்கம்)
தோற்றம்: 15.02.1930

**செல்வி சி.சிவதர்சினி**
(வேம்படி மகளிர் உயர்தர வகுப்பு மாணவி)
தோற்றம்: 29.10.1976

**செல்வி க.புஸ்பராணி**
(நீர்வேலி மத்தி)
தோற்றம்: 17.07.1966

**அழிப்பு: 22.05.1994**

22-05-94 அன்று காலைக் கதிரவன் விடியலைத் தேடி
புக்காரா சுப்பசொனிக் குண்டு மழை வீச!
தென்னக ஊடக செய்தி கதிரவன் மறைய; மூன்று புலிகள் பலி!!
இம் மறைவைக் கண்டு கலங்கிய நெஞ்சங்கள் எத்தனை? எத்தனை?
இந்த உறவுகளை இழந்து தவித்த உயிரோட்டங்களெத்தனை?
ஒன்பதாண்டுகள் கடந்தும் எமது வேதனையை எமது தவிப்பை
எமது மனக் கலக்கத்தை யாரிடம்..........?
எனினும் மனந்தளராது நாம் உறுதியுடன் எமது இன
விடியலை நோக்கி............!

- குடும்பத்தினரும், நண்பர்களும்.

(18249)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**நடராசா மகேஸ்வரி**



மண்ணில் மலர்ந்தது 29-06-1933
விண்ணில் விரைந்தது 01-06-2002

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே அம்மா!
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
நீங்கள் பெற்ற மூன்று பெண் பிள்ளைகளும்
தினம் தினம் உங்களை நினைத்து
தம் விழியில் கண்ணீர் வடிக்குதம்மா!
எல்லையில்லா அன்பு காட்டி எம்மை
வளர்த்துவிட்டு
காலனின் சுயிற்றில் அகப்பட்டு விட்டீர்கள்
அம்மா!
என்றும் உங்கள் ஆத்மா சந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

நந்தாவில் ஒழுங்கை,
தாவடி,
கொக்குவில்.

(18240)

# BOXER

## கண்கவர் தோற்றம், சிக்கனம் மற்றும் உயர்தொழில்நுட்பத்தில் என்றும் முன்னணியில்

இன்றைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள உங்களுக்கான சிறந்த முதலீடு BOXER.

நம்பிக்கை மற்றும் தரத்திற்குப் பெயர் போன நிறுவனத்தினால் சந்தைப்படுத்தப்படும் BOXER உங்கள் தெரிவுக்கேற்ற மோட்டார் சைக்கிளாக இருப்பதால் மேலும் சிறந்த வளம் மிக்க எதிர்காலத்திற்கு இதிலே சவாரி செய்யுங்கள்.

இப்போது BOXER CT DX மேம்பாடான சக்திக்கும் எரிபொருள் சிக்கனத்திற்கும் K-tec தொழில்நுட்பவியல் சகிதம்.




துணிகரமற்ற உத்தரவாதம்

பஜாஜ் இலங்கையில் முதன்முறையாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்.

- சக்திவாய்ந்த 4 ஸ்ட்ரோக் 100cc என்ஜின் - K-tec தொழில்நுட்பவியலை பக்கபலமாக கொண்டு 7.02-7.7 BHP வரை அபாரமான செயற்திறன் கொண்டது.
- கரடு முரடான பாதைப் பயணத்துக்கு உறுதிவாய்ந்த வலுப்படுத்தப்பட்ட டபிள் கிறேடில் அடிச்சட்டகம்.
- பாதுகாப்பான சவாரிக்கு சக்திவாய்ந்த 35/35W முன்விளக்கு.
- இப்போது சாதாரண சவாரி நிலைமைகளில் லீட்டருக்கு 91 கி.மீ ஓடக்கூடிய எரிபொருள் சிக்கனம் கொண்டது.

Boxer இப்போது AT, CT மற்றும் CT Deluxe மாதிரிகளில்.

## DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிடட்.

75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு - 2. தொலைபேசி : 074-700600 பெக்ஸ் : 074-700677, 687175 ஹொட்லைன் : 074-715050

அதிகாரம் பெற்ற விற்பனையாளர்கள் : குறிஞ்சி ரேடர், 75, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 0777-626919
குறிஞ்சி ரேடர், 6, நவீன சந்தை, சாவகச்சேரி. தொலைபேசி : 0777-626919

## வாழ்க வளமுடன்

பல இடர்களின் மத்தியிலும் தனது கல்விப் பணியைச் சிறப்புடன் ஆற்றுகின்ற எமது வித்தியாசாலையில், இவ்வருடம் முதல் தினமும் மாணவர்களுக்கு இலைக்கஞ்சி உணவுகளை இலவசமாக வழங்கி மகிழ்வடையும்

**பெரியார் திரு.வே.சேனாதிராசா**

(முன்னாள் தலைவர்,
வடபிராந்திய ஸ்ரீசத்திய சாயி சேவா நிலைய இணைப்புக்குழு)
அவர்களை இதய சுத்தியுடன்
வாழ்த்தி வணங்குகின்றோம். (18271)

யா/பொன்னாலை
வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.





## யப்பான் சைக்கிள் பஜார் இடம்மாற்றம்

எமது ஸ்தாபனம் கீழ்வரும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**சித்திவிநாயகர் யப்பான் சைக்கிள் பஜார்**

இல.631A, கே.கே.எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.
(பன்றிக் கோட்டுப் பிள்ளையார் கோயில் அருகில்). (18254)


## கண்ணீர் அஞ்சலி



திருமதி
**வீரகத்திப்பிள்ளை மகேஸ்வரி**
(முன்னாள் அதிபர்,
யா/குடமியன் அ.த.க.பாடசாலை)
எமது பாடசாலை ஆசிரியர்களான
திரு.வீ.மகேந்திரகுமார், திருமதி வீ.பாமதேவா
ஆகியோரின் பாசமிகு தாயார்
திருமதி வீரகத்திப்பிள்ளை மகேஸ்வரி அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மிருசுவில் அ.த.க. பாடசாலை,
மிருசுவில். (18267)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1940 - 04 - 08



மறைவு
2002 - 06 - 02

**அமரர் கனகசபை நாகரட்ணம்**

(Retired Research Assistant)
திதி: 2003-05-22 - வப்தமி

*உடலால் எம்மை விட்டுப் பிரிந்தாலும்*
*உணர்வால் எம்மோடு வாழும் இதயத் தெய்வமே!*
*நீங்கள் பிரிந்து ஓராண்டு சென்றாலும் - அப்பாவே*
*உங்கள் நினைவலைகள் என்றும் ஆறாது.*
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*268(68), பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (18269)

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்.

## கொடிகாமம் சந்தையில் குடிதண்ணீர் நிறுத்தம்

தென்மராட்சி,மே22

கொடிகாமம் சந்தையில் கடந்த ஒருவார காலமாக குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதால் பொது மக்கள், வியாபாரிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

குடிதண்ணீர் விநியோகம் நிறுத்தப்பட்டதால் வியாபாரிகள் அப்பகுதியில் உள்ள ஆலயக் கிணற்றில் தண்ணீர் எடுத்துப் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-117)

## மாணவிபடுகொலை; காவலாளி விளக்கமறியல் தொடர்ந்து நீடிப்பு

யாழ்ப்பாணம்,மே22

உரும்பிராய் சந்திரோதய வித்தியாலய மாணவியின் கொலைச் சம்பவம் தொடர்பாக ஏற்கனவே பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபரான தில்லையம்பலம் றமணன் என்பவரைத் தொடர்ந்தும் எதிர்வரும் ஜுன் மாதம் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இக்கொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று யாழ்.நீதிமன்றில் நடைபெற்றபோதே அவர் இந்த உத்தரவை விடுத்தார். (எ-8)

## கசிப்பு வழக்கில் மூவருக்கு ரூ. 4 ஆயிரம் அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,மே22

கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் மூவருக்கு யாழ்.நீதிமன்றம் 49 ஆயிரம் ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

ஆவரங்கால் மேற்கு, அச்சுவேலியைச் சேர்ந்த சின்னத்துரை குணசேகரன், பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த அன்னலிங்கம் சுபைந்தன் ஆகிய இருவரையும் தலா 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் தலா 2 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் -

புங்கன்குளம் அரியாலையைச் சேர்ந்த சிவகுமார் - பிரதீபா என்பவரை 20 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 5 ஆயிரம் ரூபா தர்மப்பணம் செலுத்துமாறும் - யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டுள்ளார். (எ-8)

## சீருடைத்துணி விநியோகம்

யாழ்ப்பாணம்,மே22

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் ஆண்டு 1 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கான சீருடைத்துணி விநியோகம் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என நல்லூர் பிரதேச செயலர் எஸ்முருகையா தெரிவித்தார்.

ஆண்டு 1இல் கல்வி கற்கும் மாணவர்களில் சீருடைத்துணி பெறுவதற்கென விண்ணப்பித்தவர்கள் தமது கிராம சேவையாளர் ஊடாக சீருடைத் துணிக்குரிய முத்திரைகளைப் பெற்று சீருடைத்துணிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் - அவர் மேலும் தெரிவித்தார். (எ-12-180)


*வெளிநாடுகளில் வாழும் உங்கள் அன்பு நெஞ்சங்களுடன்*
*உங்கள் இல்லங்களில் இருந்த வண்ணமே*

✪ உரையாட ✪ குறைந்த கட்டணம்
✪ துல்லியமான ஒலி ✪ துரித சேவை

சகல நாடுகளுக்குமான தொலைத் தொடர்பு சேவை!

**INTERNET EMAIL BROWSING CENTRE**

இன்னும் பல சேவைகள்!

மேலும் விவரங்களுக்கு :

**SRI MURUGAN**
**TELECOMMUNICATION - AGENCY POST OFFICE**
303, K.K.S. ROAD, JAFFNA.
T.P. : 021 222 2670
FAX : 021 222 3214
E mail del.smskr@eureka.lk (சி-28022)


## வளலாய் ஸ்ரீபத்திரகாளி அம்மன் கோயில் கட்டட நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | - | 6109 |
| இரண்டாம் பரிசு | - | 7977 |
| மூன்றாம் பரிசு | - | 6054 |

ஆறுதல் பரிசு இலக்கங்கள்:

| | | | |
|---|---|---|---|
| (01) | 4561 | (06) | 5878 |
| (02) | 7992 | (07) | 8582 |
| (03) | 8407 | (08) | 4995 |
| (04) | 6392 | (09) | 8004 |
| (05) | 8056 | (10) | 8586 |

குறிப்பு: *பரிசுக்குரியோர் ஆலய நிர்வாகத்துடன் தொடர்புகொண்டு பரிசுகளை உடன் பெற்றுக்கொள்ளவும்.* (18248)

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக உறுப்பினர்
**செல்லத்துரை பரணிதரன்**
அவர்களின் திடீர் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*நீர்வேலி.* (18279) - ஐக்கிய விளையாட்டுக் கழகம்.

## கண்ணீர் அஞ்சலி

**செல்வன் ஜெயபாலன் ராஜ்குமார்**
*(இரண்டாம் வருட சித்திரநெறி மாணவன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை)*



அவர்களின் திடீர் மறைவையொட்டி ஆறாத்துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்... (18270)

*கோப்பாய் ஆசிரிய கலாசாலை*

அதிபர், விரிவுரையாளர்கள்,
ஆசிரிய மாணவர்கள்,
கல்வி சாரா ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### ஜெயபாலன் ராஜ்குமார்

(மு/இரணைப்பாலை மகா வித்தியாலய ஆசிரியரும் கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவனும்)

அல்வாய் தெற்கு, மாலுசந்தி காமாட்சி அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜெயபாலன் ராஜ்குமார் நேற்றுமுன்தினம் (20.05.03) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் துரைச்சாமி ஜெயபாலன் (முன்னாள் ஆசிரியர்) - சரோஜாதேவி தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான ரமேஸ், ரவீந்தர் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பத்மநாதன்(நீர்ப்பாசனத் திணைக்களம், திருகோணமலை), மல்லிகாதேவி, ஸ்ரீகோபால்(உதயன் பணிமனை), செல்வமலர், ஸ்ரீகாந்தன்(ஜேர்மனி), ரேவதி, பாலச்சந்திரன், தவமணி, சுந்தரம், சுசீலாதேவி ஆகியோரின் அன்புப் பெறாமகனும் காலஞ்சென்ற மனோகரன் மற்றும் ஸ்ரீதரன், சிவரூபி(பிரதேச செயலகம், பருத்தித்துறை), சிவநாதன்(அபுதாபி), மாலதி, சிவகுமார், வசந்தி, இராஜசிங்கம்(தபாலகம், சங்கானை), ஜெயந்தி, பரமேஸ்வரன்(தபாளன்), சாந்தி ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பரமானந்தம் மற்றும் மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான துரைச்சாமி, நாகம்மா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (22-05-2003) வியாழக்கிழமை முற்பகல் 10மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காமாட்சியம்மன் கோவிலடி,*
*மாலு சந்தி,*
*அல்வாய் தெற்கு, அல்வாய்.* (18276)

தகவல்:
து.ஜெயபாலன்
(தகப்பன்)

### செல்லையா கிரிதரன் (மயூரன்)

பலாலி மத்தியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கிரிதரன் (மயூரன்) 19-05-2003 திங்கட்கிழமை ஜேர்மனியில் அகாலமரணமானார்.

அன்னார் செல்லையா - காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்பு மகனும ஸ்ரீஸ்கந்தராஜா, ஜெயச்சந்திரன், பவானி, வைகுந்தவாசன், காலஞ்சென்ற சாந்தினி மற்றும் ஜெயந்தினி, சுதர்சினி, றஜனி, சிவரூபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சோதிசொரூபலிங்கம், இராஜேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பிரதீபா, துஷ்யந்தி, மயூரதன், நிஷாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் சர்மிளா, கஜனி, செந்தூரன், நிரோஜினி ஆகியோரின் சிறிய தகப்பனாரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தற்காலிக முகவரி:
*கரம்பொன் மேற்கு,*
*ஊர்காவற்றுறை.* (18203)

தகவல்:
சி.செல்லையா
(தந்தை).

ஆண், பெண் இருபாலாரும் சுயதொழில் வாய்ப்பைப் பெற அரியதொரு சந்தர்ப்பம்!

## இலவச அழகுக்கலைக் கருத்தரங்கு

**Oriflame** ஸ்தாபனத்தாரின் ஆதரவுடன் கொழும்பிலிருந்து வருகை தரவுள்ள திருமதி திருமகள் சாந்தகுமார் (Independent Director) அவர்கள் Oriflame ஸ்தாபனத்தின் உற்பத்திப் பொருள்களைப் பயன்படுத்தி அழகுக் கலைகளை மேம்படுத்தும் முறைகள் பற்றி கருத்தரங்கு நிகழ்த்தவுள்ளார்.

இடம்: யாழ்.ப.நோ.கூ.ச.கேட்போர்கூடம்
கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.

காலம்: 25-05-2003 ஞாயிறு முற்பகல் 10.00மணிக்கு

அழகுக் கலையில் ஆர்வமுடைய 18 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரையும் இக்கருத்தரங்கில் பங்குபற்றிக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஏற்பாட்டாளர்:
**Mrs.Gowri Rajendraprasad**
(Cosmetic Consultant)
Beautician.

மேலதிக விவரங்களுக்கு:
**BEAUTY CENTER**
187, Adiyapatham Rd.,
Thirunelvely.
T.P: 021 222 2982

(18256)



**காட்டுமலைக் கந்தன் ஐக்கிய நாணய சங்கம் - அச்சுவேலி**

## மீதிகள் உறுதிப்படுத்துதல்

இச்சங்கத்தின் 01.09.94 - 31.08.03 வரையான காலப் பகுதி கணக்காய்வு நடைபெறுவதனால் இச்சங்க அங்கத்தவர்கள் தமது கையேடுகளைச் சமர்ப்பித்து, கையேடு கைவசம் இல்லாதவர்கள் தம்மிடம் உள்ள ஆதாரபூர்வமான ஆவணங்களைச் சமர்ப்பித்து தமது மீதிகளை 21.05.2003 முதல் 28.05.2003 வரையான திகதிகளில் செயலாளரிடம் உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். இத்திகதிகளில் உறுதிப்படுத்தத் தவறியவர்களின் மீதிகள் சங்க ஆவணங்களின்படி உறுதிப்படுத்திக்கொள்ளப்படும் என்பதனையும் இத்தால் தெரியப்படுத்திக்கொள்கின்றோம்.

பே.துரைசிங்கம்
தலைவர்.

சி.பிறேமளா
செயலாளர்.

(18266)



## Home Nursing Training

(வீட்டுத் தாதியர் பயிற்சி)

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ்.தெற்குப் பிரதேசத்தினால் சர்வதேச சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸின் பயிற்சித் திட்டத்திற்கு அமைய வீட்டுத் தாதியர் பயிற்சியை (**Home Nursing Training**) 18 வயதிற்கும் 45 வயதிற்கும் இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்து பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு சென். ஜோன்ஸ் தலைமையகத்தால் சான்றிதழ் வழங்கப்படும். இப்பயிற்சியை முடித்தவர்களுக்கு இலங்கையிலும், உலக நாடுகளிலும் நன்மதிப்பு இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்ள ஆர்வமுடையோர் தமது சுயவிவரத்தினைப் பூர்த்திசெய்து எதிர்வரும் 31.05.2003இற்கு முன்னர் யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்கும் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் நோயாளர் பராமரிப்புக் காரியாலயத்தில் கையளிக்கவும்.

*யாழ்.தெற்கு பிரதேசம்.*
தொ.பே.இல.: 222 - 3166

**மாவட்ட ஆணையாளர்,**
**சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ்.**

(18250)



## நீங்கா நினைவில் 2ஆம் ஆண்டு



*தாயின் மடியில்* 27 - 06 - 1980

*தமிழன்னை மடியில்* 22 - 05 - 2001

## கப்டன் தென்றல்/கரன்

## பாலச்சந்திரன் சிவகரன்

*(சாவகச்சேரி இந்து பழைய மாணவன்)*

தேசத்தின் விடிவிற்கு தென்றலாய்
தேசியத் தலைவன் வழி நடந்தாய்!
பாசம் கொண்ட மண்மீது
மக்களுக்காக மாவீரனானாய்!
வாசமலர் தொடுத்து
வந்தனைகள் செய்து இன்று
நேசம் கொண்ட உன்னை
நினைவில் நிறுத்துகின்றோம்.

*கல்வயல் வீதி,*
*சாவகச்சேரி.*

(18265)

- குடும்பத்தினர்.


## இன்றைய நிகழ்வுகள்

யாழ்.பல்கலைக்கழக சமூகமும் யாழ்.மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புகளும் இணைந்து அடுத்த மாத நடுப்பகுதியில எடுக்கவுள்ள மக்கள் எழுச்சிப் போராட்டம் தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கான முக்கிய கூட்டம் ஒன்று இன்று முற்பகல் 10மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

அனைத்து பல்கலைக்கழக மாணவர்களையும் கலந்துகொண்டு ஒத்துழைக்குமாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

★ ★ ★

சாவகச்சேரி நகர மகளிர் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம், யுனிசெவ் ஆகியன இணைந்து நடத்தும் எயிட்ஸ், சார்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கு இன்று பி.ப. 3.00 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், ஆர்வலர்கள் அனைவரையும் இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(117)

★ ★ ★

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாடத்தை தரம் 11இல் கற்பிக்கும் வலிகாமம் வலய பாடசாலை ஆசிரியர்களுக்கான விசேட செயற்றிட்டம் தொடர்பான செயலமர்வு இன்று பிற்பகல் 2மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

இச்செயலமர்வில் கலந்துகொள்ள வரும் விஞ்ஞானப் பாட ஆசிரியர்கள் கடந்த முதலாம் தவணை இறுதிப் பரீட்சை மற்றும் கூட்டு முன்னேற்றத் தேர்வுப் புள்ளிகள் என்பவற்றைத் தவறாது கொண்டு வருமாறு விஞ்ஞான பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஓ-152)

★ ★ ★

திருநெல்வேலி கிழக்கு வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்தின் உலக இந்து மாநாட்டை ஒட்டி சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வு இன்று மாலை 6மணிக்கு கலாநிதி எஸ். சிவலிங்கராசா தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் தமிழகப் பேராசிரியர் முனைவர் செ.சதாசிவம் 'விநாயகர் பெருமை' என்ற தலைப்பில் உரையாற்றுவார்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



J/173 சுழிபுரம் மத்தி

**திரு.நா.குமரகுருநாதன்**

அவர்கள் தரம்1 இற்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவர் மேலும் பல பதவி உயர்வுகள் பெற்று, பல்லாண்டு காலம் வாழ்கவென பாண்டவெட்டை வாழ்.மக்கள், திருநாவுக்கரசு முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்கள், சிறி கிருஸ்ணா சனசமூக நிலையத் தலைவர், செயலாளர், நிர்வாகிகள் ஆகிய நாம் மனதார வாழ்த்துகின்றோம்.

**சிறி கிருஸ்ணா சனசமூக நிலைய நிர்வாகிகள்,**
**முன்பள்ளி ஆசிரியர்கள், கிராம மக்கள்.**

(18263)



## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி அதிபரின் மைத்துனர்

## சிற்றம்பலம் சிவானந்தம்

அவர்கள் காலமானதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்கள்,
**யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.**

(சி-28020)



## மரண அறிவித்தல்

### திருமதி மனோன்மணி நடராசா

குரும்பசிட்டியைச் சேர்ந்த திருமதி மனோன்மணி நடராசா அவர்கள் 20.05.2003 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பண்டிதர் வ.நடராசா அவர்களின் அருமை மனைவியும் சக்திதாசன் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்), காளிதாசன் (ஆசிரியர், மகாஜனக் கல்லூரி), சண்முகதாசன் (முகாமையாளர், இலங்கை வங்கி, புத்தளம்), யோகதாசன் (லிகிதர், வி.எஸ்.பி. குறூப், யாழ்ப்பாணம்), Dr.தனலட்சுமி (லண்டன்), ஜெயலட்சுமி , நித்தியலட்சுமி, சுகிர்தலட்சுமி (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தேவராணி, தனலட்சுமி (ஆசிரியை, வீமன்காமம் ம.வி.), நந்தினி, நாகேஸ்வரி, Dr.சண்முகநாதன், சண்முகராசா (மொழிபெயர்ப்பாளர், அரசியல் விவகார அமைச்சு), கோபாலமூர்த்தி (ஜனசக்தி முகவர்), லவன் ஆகியோரின் அன்பு மாமியாரும் அஜித் (பொறியியலாளர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்), கஜன் (கணனிப் பொறியியலாளர், லண்டன்), தேவகாந்தன் (தேசிய கல்வியியற் கல்லூரி, வவுனியா), பிரசாந், சோபா, புகழினி, அருண், டினேஸ், சாதனா, றோகன், ராஜீவ், வினோச், சௌமியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2003) வியாழக்கிழமை காலை 9.00மணிக்கு இல.25, 6ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, கந்தர்மட இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*
(18252)

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| சீட்டிழுப்பு வாரம் | 475 |
|---|---|
| திகதி | 20.05.2003 |

| டிக்கட்டின் நிறம் - நீலம் |
|---|
| செல்லுபடியாகும் தொடர் இல. 4930866-4943131 |

**வெற்றி இலக்கங்கள்** 02 04 10 30

**லக்கினம்** கும்பம்



**ஜக்பொட் பரிசு ரூபா. 1,348,050/- வெல்லப்பட்டது**

**இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,000,000/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 273,439 | 10 | 2,734,390 |
| 2 இலக்கங்கள் | 25,123 | 20 | 502,460 |
| 1 இல + லக்கினம் | 24,943 | 30 | 748,290 |
| 2 இல + லக்கினம் | 2,275 | 100 | 227,500 |
| 3 இலக்கங்கள் | 663 | 500 | 331,500 |
| 3 இல + லக்கினம் | 66 | 5,000 | 330,000 |
| 4 இலக்கங்கள் | 02 | 100,000 | 200,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 1,348,050 | 1,348,050 |
| மொத்தம் | 326,512 | - | 6,422,190 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. **6,422,190/-**

தொடர் இல. 5920389க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2003 மே 23ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

**4935110-2-36**
**4931677-3-73**
**4938960-2-32**
**4932191-3-12**
**4931103-9-13**

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

# இலங்கையில் பரவத்தொடங்கியுள்ள ஒட்டுண்ணி நோய் லீஸ்மனையாசிஸ்

ஆபிரிக்க, மத்திய கிழக்கு நாடுகள், உள்ளடங்கலாக 88 நாடுகளில லீஸ்மனையாசிஸ், பிரதேசத்திற்குரித்தான ஓர் ஒட்டுண்ணி நோயாகக் கருதப்படுகிறது. இலங்கையில் முதன முதலாக 1992ஆம் ஆண்டு இந்நோயின் தாக்கத்துக்குட்பட்ட நோயாளி இனங்காணப்பட்டபோதிலும், இந்நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் இலங்கையில் வசித்த காலப் பகுதியில் இந்நோயின் தாக்கத்துக்குட்பட்டமைக்கான சான்றுகள் இருந்ததில்லை. இருந்தபோதிலும் அண்மைக்கால ஆய்வுகளின்படி பெரும்பாலான உள்ளூர் இலங்கை வாசிகள் இந்நோயினால் பீடிக்கப் பட்டிருந்தமை அறிய வந்துள்ளது.

**இலங்கையில் இந்நோயின் தாக்கம்**

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த கலாநிதி நடீரா கருணாவீராவின் ஆய்வுக்குழுவினர் அண்மையில் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் லீஸ்மனையாசிஸ் நோயின் அறிகுறி கொண்டவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்ட 175பேரில் 113பேர் அந்நோயினால் பீடிக்கப்பட்டிருந்தமையை உறுதி செய்ததுடன் அந் நோய்க்காரணி "Leishmania donovani"என இனங்கண்டுள்ளனர்.

இங்கு குறிப்பிடப்படவேண்டிய முக்கியமான விடயம் என்னவெனில் இனங்காணப்பட்டவர்களில் சுமார் 75%ஆனவர்கள் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், வவுனியா மற்றும் மணலாறு காட்டுப் பிரதேசங்களில் அமைந்துள்ள இராணுவ முகாம்களில் இவர்கள் கடமை புரிந்தவர்களாவர். அத்துடன், நோயின தாக்கத்துக்குட்பட்ட பொதுமக்கள் பலர் மணலாறுப்பகுதி எல்லைக் கிராமங்களில் வசிப்பவர்களாவர்.

குறிப்பாக, காட்டுப் பிரதேசங்களில இந்நோய்க்காரணியைக் காவும் மணல் ஈ பெருமளவில் காணப்படுவது, இப் பிரதேசங்களில் அது தனக்குரிய

சி.நோ.சுரேந்திரன்
விலங்கியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

குருதி-உணவைப் பெறும் விலங்குகள் அதிக எண்ணிக்கையில் வாழ்வதாலேயாகும். மேலும் இந்நோய்க் காரணியை 'சேமிக்கும் விருந்து வழங்கி'யாக விலங்குகள் அமைவதும், இந்நோயின் தாக்கம் அதிகளவில் வனப்பிரதேசத்தை அண்டி வாழும் மக்கள் மத்தியில் காணப்படுவதற்கான காரணிகளாக அமைகின்றன.

இதுவரை வன்னிப் பெருநிலப்பரப்புக்குள்ளேயோ அல்லது யாழ்ப்பாணக் குடாநாட்டிலோ இந்நோயின் தாக்கத்துக்குட்பட்ட எவரும் இனங் காணப்பட்டதற்கான உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் வெளியிடப்படாத நிலையில் இந்நோயின் தாக்கம் இப்பிரதேசங்களில் இல்லை என முற்று முழுதாக மறுத்துவிட முடியாது.

**நோய்க் காரணி**

ஒரு கல கலத்தக சவுக்குமுளை கொண்ட புரட்டோசோவன் இனமாகிய Leishmania இந்நோயை ஏற்படுத்தும் காரணியாகும். 20இற்கு மேற்பட்ட உப இனங்கள் மனிதனைத் தாக்குவதுடன் பரந்த வேறுபட்ட நோய் அறிகுறிகளை ஏற்படுத்துகின்றன.

விலங்குகளை குறிப்பாக கொறிதுண்ணிகள், வீட்டு வளர்ப்பு விலங்குகளை பெரும்பாலும் தாக்கினாலும் மனிதனையும் இது பாதிக்கின்றது.

**காவி**

தொற்றலுக்குட்பட்ட மணல் ஈ (Sand fly) (Phlebotomus) மனிதனிலிருந்து குருதி - உணவைப் பெறும்




போது நோய்க்காரணி மனிதனுக்குக் கடத்தப்படுகின்றது. இரவு நேரங்களில் மனிதனைத் தாக்கும் இப்பூச்சியினம் வனப்பிரதேசங்கள், குகைகள் மற்றும் பொந்துகளில் விருத்தியடைகின்றன. வனவிலங்குகள், வளர்ப்பு விலங்குகள் என்பன தொற்றலுக்குரிய 'சேமிப்பு விருந்து வழங்கி'யாக அமைகின்றன. இச்சேமிப்பு விருந்து வழங்கியிலிருந்து அல்லது தொற்றலுக்குள்ளான மனிதர்களிலிருந்து குருதியைப் பெறும்போது காவி தொற்றலுக்குள்ளாகின்றது.

**நோயின் அறிகுறிகள்**

பொதுவான அறிகுறிகளான காய்ச்சல், உடல் நிறை குறைதல், குருதிச்சோகை என்பவற்றுடன் மண்ணீரல், ஈரல், நிணநீர்க் கணுக்கள் வீக்கமடைந்திருக்கும்.

இந்நோய் நான்கு நிலைகளில் காணப்படுகின்றது:

1) உடலக லீஸ்மனையாசிஸ் (Visceral Leishmaniasis):

மிகவும் ஆபத்தான நிலை. L donovani இதன் காரணியாகும். சிகிச்சை அளிக்காவிடத்து மரணம் சம்பவிக்கலாம்.

II) தோலுக்குரிய லீஸ்மனையாசிஸ் (Cutaneous Leishmaniasis):

இது பொதுவாகக் காணப்படும் நிலை. 1-100இற்கு மேற்பட்ட எளிய தோல் விரணங்களை (Lesions) தோற்றுவிக்கும். தானாகவே சில மாதங்களில் சுகமடைந்தாலும் விரும்பத்தகாத தோல் வடுக்களை விட்டுச் செல்லும். இந்நோய்க்குரிய காரணி L major ஆகும்.

III) சீதத் தோலுக்குரிய லீஸ்மனையாசிஸ் (Mucocutaneovs Leish manicsis)

இந்நிலை ஆரம்பத்தில் தோற் புண்களைத் தோற்றுவித்து பின்னர் மிக மோசமான இழையச் சேதத்தை, குறிப்பாக மூக்கு, காது போன்ற பகுதிகளில் ஏற்படுத்தும். இந்நிலையை L brazilliensis தோற்றுவிக்கின்றது.

பரவிய தோலுக்குரிய லீஸ்மனையாசிஸ் (Diffuse Cutaneovs Leishmaniasis:

பரவலான நீண்டகால தோல் விவரணங்களை ஏற்படுத்தி தொழு நோய் போன்ற தோற்றத்தை கொடுக்கும். இந் நிலையில் சிகிச்சை அளிப்பது கடினமானது.

**நோயை இனம் காணல்**

இழையங்கள்(என்பு, மச்சை, மண்ணீரல், ஈரல், நிணநீர் கணுக்கள்) மற்றும் குருதியில் ஒட்டுண்ணியின் சவுக்கு முளையற்ற பருவத்தை இனம் காணுதல் மூலமாக (biopsy) நோய் உறுதிப்படுத்தப்படுகின்றது. HIV-1 காவிகளில் சிறுகுடல், சுவாசப்பாதை என்பனவும் ஒட்டுண்ணியின் தாக்கத்துக்குட்படுகின்றன.

**நோயைத் தடுத்தலும் கட்டுப்படுத்துதலும்:**

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தோலுக்குரிய லீஸ்மனையாசிசினால் பீடிக்கப்பட்ட நோயாளிகள் சிகிச்சையளிக்காதவிடத்து குணமடைவதுடன், மேலும், தொற்றலுக்கு எதிரான நிர்ப்பீடனத்தைப் பெறுகின்றனர். ஏனைய வகைகள் சிகிச்சையளிப்பதற்குக் கடினமானவை. இவற்றிற்கு எதிராக Pentavalent antimony (Glucantime) அல்லது Sodium Stibogluconate (Pentostam) போன்ற மருந்துகள் பயன்படுத்தப் படுகின்றன.

காவி மூலமான நோய் பரவலைத் தடுப்பதற்கு காவியை விரட்டும்/கொல்லும் இரசாயனப் பொருள்களைப் பயன்படுத்தலாம். காவியையும் "சேமிப்பு விருந்து வழங்கி" விலங்குகளையும் கட்டுப்படுத்துவது மிகவும் செலவு கூடியதுடன் சிறந்த உட்கட்டமைப்பு, பராமரிப்பு என்பன அவசியமாகும். காவியைக் கட்டுப்படுத்த, நோய் பரவும் பிரதேசங்களில் உள்ள வீடுகளில் பூச்சி நாசினிகள் தெளிப்பது பலனைக் கொடுக்கும். வனப்பிரதேசங்களுக்கு அண்மையில் வசிப்பவர்கள் நுளம்பு வலைகளைப் பயன்படுத்துவது அவசியமாகும். குறிப்பாக ஒருங்கிணைந்த - பன்முகப்படுத்தப்பட்ட - நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மூலமாகவே இந் நோயைக் கட்டுப்படுத்த முடியும்.

**மேற்கொள்ள வேண்டிய ஆய்வுகள்**

இலங்கையில் இந்நோய் பற்றிய பூரணமான அறிவு இன்மையால், வடபுலத்தில், குறிப்பாக வன்னிப் பிரதேசத்தில் இந்நோயின் தாக்கம், அதன் பரம்பல், காரணியை இனங் காணல், காவியின் உயிரியல் மற்றும் சேமிப்பு விருந்து வழங்கிகள் பற்றிய விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் மட்டுமே இந் நோய்குரிய சரியான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியும்.

## 'நியாப்' திட்டம் குறித்து இன்று பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,மே22

'நியாப்' திட்டத்தின் திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல் ஆகியவற்றினை ஒழுங்குபடுத்துவதற்கான துரித மதிப்பீட்டுக்குழுவின் ஆய்வு பற்றிய பயிற்சிப் பட்டறை ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 9மணிக்கு யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

காலைமுதல் மாலைவரை நடைபெறவுள்ள இப்பயிற்சிப் பட்டறையில் 'நியாப்'பின் கோட்பாடும் அதன் செயற்பாடுகள், நோக்கங்கள் பற்றியும் 'நியாப்' தொழில் நுட்பப் பணிப்பாளர் சீ.மனோகரன் விரிவுரை வழங்குவார்.

தொடர்ந்து யாழ்.மாவட்டத்தின் நீர் வளம், அதனைப் பேணுவதற்கான அமைப்பு முறைகள், புனரமைத்தலில் அவற்றின் முன்னுரிமை ஆகியவை பற்றி யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கருத்துரை வழங்குவார்.

யாழ்.மாவட்டத்தில் 'நியாப்'பின் நீர்ப்பாசன கட்டுமானம் பற்றிய கோட்பாடுகள், கட்டுமான அமைப்பு முறைகள், திட்ட செயற்பாட்டு ஒருங்கமைப்பு ஆகியன பற்றிய துரித மதிப்பீட்டுக் குழுவின் அவதானிப்புகள், அவற்றின் ஒருங்கமைப்பதற்கான சிபார்சுகள் பொறியிலாளர் பொ.விக்கினேஸ்வரன், கலாநிதி சண்முகலிங்கம், பொறியியலாளர் எம்.இரத்தினம் ஆகியோரும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

எதிர்காலத்தில் யாழ்.குடாநாட்டில் முன்னெடுக்கப்படவுள்ள புனரமைப்பு, புனர்வாழ்வுப் பணிகள் தொடர்பாக பின்பற்றப்படவேண்டிய கோட்பாடு ஒன்றினை உருவாக்குவதற்கு இக்கருத்தரங்கு வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.



பிரபல எழுத்தாளர் ஐ.சாந்தன் அண்மையில் கென்யா நாட்டுக்கு விஜயம் செய்தார். 'எங்கா' நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு சுற்றுலாவின்போது மாசாய் இன கிராமம் ஒன்றில் இடம்பெற்ற வரவேற்பு நடனத்தின் பின் அந்த மக்களுடன் அவர் எடுத்துக் கொண்ட படம் இது.

## சர்வதேசத் தரப்பயிற்சியை வழங்குவதில் முன்னிற்கும் 'நிட்'

முழு உலகையும் உள்ளடக்கிய செய்தித் தொழில்நுட்பம் சார்ந்த ஒரு கூட்டமைப்பு 'நிட்'(NIIT). இது உலகம் முழுவதும் 27 நாடுகளில் 3ஆயிரம் செய்தித் தொழில்நுட்ப மையங்களைக் கொண்டுள்ளது. இத்துறையில் உலகின் தலைசிறந்த நிறுவனங்களில் ஒன்றாகவும் 'நிட்'விளங்குகின்றது.

'நிட்'நிறுவனம் ஆசியாவின் முதல் தரமான பயிற்சி வழங்கும் ஒரு ஸ்தாபனம் ஆகும். 2002ஆம் ஆண்டில் சிறந்த சர்வதேச தகவல் மையமாக தெரிவு செய்யப்பட்டதுடன், தொடர்ந்து 3ஆண்டுகளாக ஆசியாவில் செய்தித் தொழில் நுட்பத்தில் பயிற்சி வழங்கும் சிறந்த ஸ்தாபனமாகவும் இந்நிறுவனம் உள்ளது.

'நிட்' 1997ஆம் ஆண்டு இலங்கையில் தனது சேவைகளை ஆரம்பித்தது. இன்று இந்த நாட்டில் 7மையங்களில் கற்பித்தலையும், பயிற்சி வழங்குதலையும் மேற்கொண்டுள்ளது.

6 வயதில் இருந்து 60 வயது வரையிலான பல வயது மட்டங்களில் உள்ளோருக்கும் கற்றல் தொடர்பான போதனைகளை 'நிட்' அளித்து வருகின்றது.

பயிற்சியாளர்கள் 3தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படுகின்றது. முதல் நிலையில் உள்ள கற்கையில அதனைப் பயன்படுத்துவதற்கான முறைகள், வலை அமைப்புகள் இணையத்தளம், மின் அஞ்சல் ஆகியன அடங்குகின்றன. இரண்டாவது வகையில் செய்தித் தொழில் நுட்பம் சார்ந்த தொழில்களைத் தேடுவதற்கான தராதரப் பத்திரங்கள், மின்னியல் தொழில்நுட்ப தராதரப் பத்திரம், 'நிட்'இன் தொழில் ரீதியான சான்றிதழ்கள், மின்கணனி பாவனை தொடர்பான சான்றிதழ்கள் ஆகியவற்றை பெற்றுக்கொள்வதற்கான பயிற்சிகள் இடம்பெறுகின்றன.

**தொழில் வளம்**

மூன்று வகையைச் சார்ந்த கல்வியில் மாணவர்களும், உயர்கல்வியை நாடுபவர்களும் கூடுதலான அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான ஜாவா, வின்டோ 2000 போன்ற கற்கை நெறிகள் அடங்கியுள்ளன.

'நிட்' தனக்கென ஓர் ஆய்வு மையத்தை இந்தியத் தலைநகர் டில்லியில் 'இந்தியத் தொழில் நுட்ப ஸ்தாபனம்' என்ற பெயரில் நடத்துகின்றது. இது தனக்கென பாட விதானங்கள், கற்பித்தல் வழி முறைகளை உருவாக்கிக் கொள்கின்றது.

'நிட்'பயன்படுத்தும் வழிமுறைகள வித்தியாசமானவை. இங்கு மாணவர்கள் நூறுசதவீத கணனிப் பாவனைக்கு நேரம் ஒதுக்கப்படுகிறது.

உலகின் முன்னணியில் உள்ள நான்கு பல்கலைக்கழகங்களுடன் தொடர்பு உண்டு. அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளில் அவை உள்ளன. இங்கு கல்வி கற்பவர்கள் 'நிட்'இல் பயிற்சி பெற்றிருந்தால் அவர்களது பல்கலைக்கழகக் கற்கைக்காலம் குறைக்கப்படும்.

'நிட்' சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழ்களை வழங்குகின்றது. இச்சான்றிதழ்கள் சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளக் கூடியவை. குறிப்பாக 44 நாடுகளில் இச்சான்றிதழ்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இச்சான்றிதழ்கள் மேல்நாடுகளில் வேலை வாய்ப்பை மாத்திரம் அல்லாது அந்த நாடுகளில் நுழைவதற்கான அனுமதியையும் பெற்றுத்தருகின்றன.

இலங்கையில் 'நிட்' எல்லாப் பாகங்களுக்கும் தனது சேவையை விஸ்தரிக்க உள்ளது. குறிப்பாக வடக்கு, - கிழக்கிலும் இச்சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்திலும் 'நிட்' தனது மையத்தை ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. உலகில் கணனித் தொழில் நுட்பத்தில் ஏற்பட்ட அண்மைய முன்னேற்றங்களை கூட 'நிட்' இலங்கையில் அறிமுகப்படுத்த உள்ளது. ★

## சாயி சிந்தனை

### நிரந்தரமான ஆனந்தம்



மனிதர்கள் பல வகையில் ஆனந்தமாக இருக்க முயற்சி செய்கிறார்கள். இவையெல்லாம் அஞ்ஞானத்துடன் செய்யப்படும் பிரயத்தனங்களே. உங்களைத் தாண்டி ஆனந்தம் எங்கும் வெளியில் இல்லை. நீங்களே ஆனந்த ஸ்வரூபம். இந்த உண்மையை மறந்து எங்கோ ஆனந்தம் வெளியிலிருந்து வருவதாக எண்ணி முயற்சிப்பது வெறும் அறிவற்ற செயல், எதையோ நீங்கள் ஆனந்தமாக எண்ணினால் அது வெறும் பிரமையே. பிரமைதான் உங்களை இவ்வாறு ஆட்டுவிக்கிறது. பிரமை இருக்கும் வரை இறைவன் கண்ணுக்குத் தெரிவதில்லை. பிரமையை விரட்டிவிட்டபின் இறைவன் உங்களுக்கு சாட்சாத்காரமாக விளங்குகிறார்.

இந்தப் பிரமைக்கு எது காரணம்? உங்கள் தேகமே அதற்கு மூலகாரணம். தேகபிமானமே இந்தப் பிரமைக்குக் காரணமாகி இறைவனை உங்களிடமிருந்து தள்ளி வைக்கிறது. நீங்கள் பிறக்கிறீர்கள், வளர்கிறீர் கள், படிக்கின்றீர்கள், திருமணம் செய்து கொள்கிறீர்கள்.

இவையனைத்தும் இடைபேவந்த ஓடும் மேகங்கள் இவை ஆனந்தத்தைத் தரக்கூடியவை அல்ல. நீங்கள் பிறக்கும் முன்பும், பிறந்த பின்பும், பின்னர் இறந்த பின்பும் இருக்கக்கூடியது ஆனந்தம். இது திரிகால பாக்கியம். இதுவே நிறைந்திருக்கக் கூடிய சத்தியம். இறைவன் நீங்கள் பிறப்பதற்கு முன்பும் இருந்தார். உங்களுக்குள்ளும் இருக்கிறார். நீங்கள் மரித்த பின்பும் இருப்பவர். எங்கும் நிறைந்திருக்கம் சத்தியம் அவரே! இவ்வாறு மாறாத சத்தியத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

(ஆதாரம்: சனாதன சாரதி)

## வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே22

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் சந நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த வெள்ளி நிகழ்வு வரிசையில் இவ்வார நிகழ்வாக நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப் பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ. குமாரவேல் "பகவத் கீதை" எனும் தொடரில் சொறபொழிவு நிகழ்த்துவார். (எ-3)

## உதைபந்தாட்டம்

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டிலான லீக் சுற்றுப் போட்டி இன்று முதல் யாழ்துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ மாலை 4மணி - பாரதி எதிர் கிறின்கிங்ஸ்.

★ மாலை 5.15மணி - றோயல் எதிர் சென் நீக்கிலஸ்


**NEW SCIENCE HALL**

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

**A/L 2004 DAY CLASS**

(A/L 2003 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு)

எமது வழமையான ஆசிரியர்குழு

ஆரம்பம்: 01.06.2003

ஞாயிறு மு.ப.8.00

(18253)

யாழ்.மக்களின் நலன் கருதி

EXPO AVIATION

LION AIR

SERENDIB EXPRESS

ஆகிய மூன்று விமானங்களுக்குமான

யாழ். – கொழும்பு | கொழும்பு – யாழ்.

விமான ரிக்கெற்றுக்களை

ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள.....

**ஹெப்பி இம்பெக்ஸ்**

புதிய உயர் கல்லூரி

95, பருத்தித்துறை வீதி (ஆரிய குளம் முன்பாக),

யாழ்ப்பாணம். 021 - 222 6144

24 மணி நேர சேவைக்கு 077 - 6038505

(18282)


## VACANCIES

## University of Jaffna, Sri Lanka

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 11-06-2003 for the post of

**Assistant Lecturer(on contract) in Education (Comparative Education)**

**salary:-** Rs 10,800/-per month(fixed)

Applicants those who wish to apply for the above post should have

**B.Ed/BA with Postgraduate Diploma in Education with Distinction or Merit Pass**

Application forms and other details may be obtained from the office of the **Assistant Registrar/Establishments, University of Jaffna, Sri Lanka,** either in person or by sending a money order for Rs.20/- per form.Those who wish to obtain application forms by post are requested to send a Money order/Postal order drawn in favour of the **"Bursar, University of Jaffna"** together with a self-addressed stamped envelop **23x30cm.** in size.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Boards should channel their applications through the Head of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

**Registrar,**
University of Jaffna,
Sri Lanka.
2003.05.20 (C/28023)

# சுபீட்சம் கிடைக்குமென்றிருந்தோம் ஆனால் அரசு எம்மை ஏமாற்றிவிட்டது!

## பிரதமருக்கு வலி. வடக்கு மக்கள் மகஜர்

யாழ்ப்பாணம்,மே22

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் எமக்கு ஒரு சுபீட்சமான வாழ்வு கிடைக்கும் என நம்பியிருந்து ஏமாற்றமடைந்து விட்டோம்.

இவ்வாறு வலி.வடக்கு மக்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் தெரிவித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் யாழ்.செயலகம் முன்பாக தம்மை சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துமாறு கோரி வலி. வடக்கு மக்கள் மறியற்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் முடிவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்தனர். அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வலி.வடக்கு பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்தோர் அங்கு மீளக்குடியமர இதுவரை ஆக்கபூர்வமான ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அரசின் இராணுவ நடவடிக்கைகளினாலேயே மக்கள் தமது சொந்த வாழ்விடங்களில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். அங்கு வாழ முடியாத நிலையில் வலி. வடக்கு மக்கள் தாங்கள் குடியிருந்த வீடுகளை, விவசாய நிலங்களை, கடல்வளத்தை, பயன்தரு மரங்களை, தமது சொத்துகளை இழந்து அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர். அவர்கள் நாட்டின் பல பகுதிகளிலும், குறிப்பாக நலன்புரி நிலையங்கள் என சொல்லப்படும் அகதிமுகாம்களிலும், கொட்டில்கள், குடிசைகள், உறவினரின் வீடுகள என கடந்த 15 வருடங்களாக மிக மோசமான - அடிப்படை வசதிகள் - அவலமான வாழ்வை இன்று வாழ்ந்துவருகின்றனர்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் வலி.வடக்கு மக்களுக்கு ஒரு சுபீட்சமான வாழ்வு கிட்டும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஒப்பந்தம் செய்யப்பட்டு ஒரு வருடம் பூர்த்தியான பின்பும் - ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்ற பின்பும் அவர்களது வாழ்வியல் தொடர்பான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வலி.வடக்கு மக்களின் வாழ்மனைகள் பலவற்றில் இராணுவத்தினரின் முகாம்களும், காவலரண்களுமாகவே உள்ளன. இதனால், இம்மக்கள் குடியிருக்க வழியின்றி உள்ளனர். அத்துடன் விவசாய, கடல் தொழில்களை இழந்தும் பெரும் இடரை எதிர்கொண்டுள்ளனர். ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டபடி இராணுவம் மக்களது வீடுகளையும், நிலத்தையும் விட்டு விலகினால் இந்த அவலம் ஏற்பட்டிருக்க வாய்ப்பேயில்லை. கடந்த 15 வருடங்களுக்கு மேலாக துன்பத்திலேயே வாழும் வலி.வடக்கு மக்களை மேலும் துன்பத்துக்குள்ளாக்குவது போல் புதிய இராணுவ முகாம்களும் இராணுவ நிலைகளும் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவை எந்த மனிதநேய விதிமுறைக்குள் அடங்குகின்றன என்றே தெரியவில்லை.

ஆகவேதான் எமது உணர்வலைகளை வெளிப்படுத்தும் வகையில் யாழ். மாவட்ட நிர்வாக செயலகம் முன்பாக மறியற்போராட்டத்தை நடத்தி இம்மகஜர் மூலம் தெரியப்படுத்தி உள்ளோம். இதனை நன்கு ஆராய்ந்து புரிந்துணர்வ உடன்படிக்கையையும் ஆறாம் சுற்றுப்பேச்சில் எடுக்கப்பட்ட முடிவுகளையும் நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கோரிக்கைகள் கவனிக்கப்படாதவிடத்து பரந்த அளவில் தொடர்ந்து போராட்டங்களை நடத்தும் நிலைக்கு எமது மக்கள் தள்ளப்படுவார்கள் என்பதையும் வலியுறுத்துகிறோம் என்றுள்ளது. (ஓ-8-5-86)

## ஆங்கில, சிங்கள போதனாசிரியர்களுக்கு!

அரச நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்கு போதனாசிரியாகள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

குறித்த மொழியை பட்டத்தேர்வில ஒரு பாடமாகக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமெனவும் -

பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் சேவையிலிருந்து இளைப்பாறியவர்களும் விண்ணப்பிக்கலாம் என்றும் - வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை இம்மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் வலய அலுவலகத்திற்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## குமுதினி சேவை வெள்ளி இடம்பெறாது

யாழ்ப்பாணம்,மே22

நெடுந்தீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையில் சேவையில் ஈடுபடும் குமுதினிப் படகுச் சேவை நாளை வெள்ளிக்கிழமை அவசரத் திருத்த வேலை காரணமாக இடம்பெறமாட்டாது என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது. (3)


**விற்பனைக்கு**

பஜாஜ் ரக ஸ்கூட்டர் மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
இல.06,பஸ்நிலையம்,
யாழ்ப்பாணம். (18281)

**நாகம்ஸ் சுன்னாகம்**

மாதவன்-ஸ்நேகா சார்லி வையாபுரி நடித்த

**என்னவளே** (ரீலை)

இனிய பாடல்கள் நிறைந்த படம்


தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே.)

(18201)

**ராஜா யாழ்ப்பாணம்**

3 ஆவது வாரம்

விஜய், மீராஜஸ்மின் ,கருணாஸ்



புதிய கீதை

காட்சிகள் :10.30, 2.30, 6.30,

சனி, ஞாயிறு: 10.30,2.30, 6.30, 9.30

(C/27026)

**லிபேர்ட்டி அச்சுவேலி**

விஜய், ரம்பா நடித்த



என்றென்றும் காதல்

11.00, 3.00, 7.00 (பு.நே)

**லஷ்சுமி சினிமா (இணுவில்)**

நடிகர் திலகம் சிவாஜிகணேசன், பத்மினி மற்றும் பலர் நடிப்பில்

**தில்லானா மோகனாம்பாள்**

11.00, 3.00, 6.30 (பு.நேரம்)

(18930)

**நிறைஞ்சனாஸ்**

ரஜனி,ரம்பா, சௌந்தர்யா நடித்த

**அருணாச்சலம்**

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு

CASTAWAY


# மரண அறிவித்தல்கள்

## காசிப்பிள்ளை மயில்வாகனம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர், உரும்பிராய் சந்திரோதயவித்தியாசாலை)

தையிட்டி காசிப்பிள்ளை மயில்வாகனம் அகாலமரணமானார்.

அன்னார் தையிட்டிப்புலத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - புகாத்தைப்பிள்ளை தம்பதிகளின் அன்புமகனும், உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் கனகசபை மற்றும் சீனிக்குட்டி தம்பதிகளின் அன்புமருமகனும், உரும்பிராய் ஓய்வுபெற்ற ஆசிரியை புஷ்பலீலாவதியின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களானசெல்வநாயகம், கந்தையா மற்றும் சரவணமுத்து (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கமலாம்பிகை, பாலசுப்பிரமணியம் மற்றும் சுந்தரகாந்தன் (ஓய்வுபெற்ற உபஅதிபர், முத்துத்தம்பி மகாவித்தியாலயம், திருநெல்வேலி), தனபாலசிங்கம் (ஓய்வு பெற்ற படவரைஞர், நீர்ப்பாசனத்திணைக்களம் - இலங்கை) ஆகியோரின் அருமை மைத்துனரும், தேவிகா, இளங்குமரன் (ஜேர்மனி), சூரியகலா (ஆசிரியை, இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம், இணைப்பாளர், திருமறைக்கலாமன்றம் - வவுனியா), வாசுகி (கனடா), யாழினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவானந்தராஜா (உரிமையாளர், அருள்விநாயகர் - புத்தூர்), ஆனந்தி (ஜேர்மனி), அமரநாதன் (சவூதிஅரேபியா), மதனமோகன் (கனடா), பாலேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், வித்தியாசாகர் (மாணவன், யாழ்.இந்துக்கல்லூரி), கீதாஞ்சலி, சிவாஞ்சலி, மெதுஷான், விதுஷன், விதுனன், மஞ்சுபார்கவி, ஜனகன், சாருஜா, கானப்பிரியா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.05.2003) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வடக்கு எருளன் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"கோவில் வளவு"*
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*

தகவல்:
ம.இளங்குமரன் *(மகன்)*

(18278)

## பொன்னுத்துரை சிதம்பரநாதன்

**(மோகன்)**

நல்லூரைப் பிறப்பிடமாகவும் முத்திரைச்சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சிதம்பரநாதன் (மோகன்) அவர்கள் 20.05.2003 செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் பொன்னுத்துரை - காலஞ்சென்ற சிவபாக்கியம் ஆகியோரின் அன்புமகனும், காலஞ்சென்ற கணேசன் மற்றும் இரத்தினாம்பாள் ஆகியோரின் மருமகனும், கமலாதேவியின் அன்புக்கணவரும், ஜீவிதன், கீர்த்திகா, (தரம்5 மாணவி, புனித ஜோன் பொஸ்கோ வித்தி.) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கேசவநாதன், கமலநாதன், விமலநாதன், ரஜனிதேவி, பற்குணநாதன், யமுனாராணி, ரஞ்சனா, யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி, திருநாவுக்கரசு, பாலகிருஷ்ணன், நாகபூசணி, நாகலட்சுமி, ரகுவரேந்திரன், பாலச்சந்திரன், விநாயகமூர்த்தி, சபாநாயகி, செல்வமலர், சீதா, விஜயா, தயா, திருமதி மாணிக்கவாசகர், சாந்தி, வசந்தி, ஆனந்தி, ஆகியோரின் மைத்துனரும், மூர்த்தியின் சகலனும், மகேஸ்வரி, நாகேஸ்வரி, பரமேஸ்வரி, ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான செல்வராஜா, ஆறுமுகம் ஆகியோரின் மருமகனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22.05.2003) வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு அன்னாரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*11/71 பருத்தித்துறை வீதி,*
*கமநலசேவைத்திணைக்கள வீதி,*
*முத்திரைச்சந்தை.*

தகவல்:-
க.ரகு
*(தருவயின் - மைத்துனர்)*

(18277)

# நோயாளருடன் வந்த அம்புலன்ஸை முகமாலையில் படையினர் தடுத்தனர்

கிளிநொச்சி அன்புச்சோலை மூதாளர் பேணலகத்தில் இருந்து யாழ்.வைத்தியசாலைக்கு நான்கு அவசர நோயாளர்களுடன் நேற்று மாலை வருகை தந்த அம்புலன்ஸ் வாகனத்தை யாழ்ப்பாணத்துக்குள் நுழைய விடாமல் முகமாலைச் சோதனைச் சாவடியில் வைத்து படையினர் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

குறித்த வாகனத்துக்கு வரி மற்றும் காப்புறுதிப்பத்திரம் இல்லையெனத் தெரிவித்தே படையினர் அதனை குடாநாட்டுக்குள் பிரவேசிக்க அனுமதிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

வாகனசாரதி கிளிநொச்சி உதவி அரச அதிபரின் சிபாரிசுக் கடிதத்தை காட்டிய பின்னரும் படையினர் நோயாளர் வாகனத்தை அனுமதிக்க மறுத்து விட்டனர். இதனையடுத்து நோயாளர்கள் நால்வரும் போக்குவரத்துச் சபை பஸ்ஸிலேயே யாழ் வைத்தியசாலைக்கு கூட்டிவரப்பட்டனர்.

இதேவேளை - போக்குவரத்துப் பொலீஸாரின் பணிகளை முகமாலைப் பகுதியில் படைத்தரப்பு மேற்கொள்வதனை தான் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என கடந்த மாதம் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த பொலீஸ்மா அதிபர் ரி.ஆனந்தராஜா செய்தியாளர்களிடம் கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-9)

# கொக்குவெளியில் மீளக்குடியமர சிங்கள குடும்பங்கள் திரும்பி வருகை

வவுனியா,மே22

வவுனியா மாவட்டத்தில் இடம்பெயர்ந்த சிங்கள குடும்பங்கள் 18 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பத் தொடங்கியுள்ளன. வவுனியா வடக்கு பிரதேசத்தில் உள்ள கொக்குவெளி என்ற கிராமத்தில் இருந்து இடம்பெயர்ந்த சிங்கள குடும்பங்கள் அக்கிராமத்திற்கு மீண்டும் திரும்பிக்கொண்டிருக்கின்றன.

1985ஆம் ஆண்டு கொக்குவெளி கிராமத்தில் வாழ்ந்த 85 சிங்களக் குடும்பங்கள் இனப்பிரச்சனை காரணமாக இடம்பெயர்ந்து மதவாச்சி, நொச்சியாகம்,அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் வசித்து வந்தனர்.

இக் குடும்பங்கள் மீளக்குடியமருவதற்காக அரசு 25,000 ரூபா வீதம் வழங்குகிறது. தற்போது கொக்குவெளி கிராமம் வெறும் காடாக உள்ளது. காட்டைத் துப்புரவு செய்யும் பணிகளும் தற்போது ஆரம்பமாகியுள்ளன. (எ)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் நேற்று காலை வவுனியாவிலிருந்து கொழும்புக்கு புறப்பட்டதாக புலிகளின் வவுனியா அரசியற் பணிமனை தெரிவித்தது.

வடக்கு - கிழக்குப் பகுதி மக்களிடம் மிகக் குறுகிய காலத்துக்குள் சேகரிக்கப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ள உணவுப் பொருள்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு இன்று விநியோகிக்கப்படும்.

## வெள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பது தொடர்பாக உபகுழு ஒன்றை நியமிப்பது என்றும் பிரதமர் யோசனை ஒன்றை அமைச்சரவையில் முன்வைத்தார்.

## இக்கட்டான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களால் பாதிக்கப்படும்போது கை கொடுத்து உதவ இந்தியா தயாராக இருக்கின்றது. ஏற்கனவே இரண்டு கப்பல்கள் மூலம் பல்வேறு உதவிப் பொருள்களை இந்திய வழங்கியுள்ளது.

தேவை ஏற்படும்போது மேலும் உதவிகளை வழங்கத்தயாராக இருக்கின்றது எனவும் இந்தியத் தூதுவர் இச்சந்திப்பில் தெரிவித்தார்.

இந்தியா வழங்கிய இந்த உதவிகளுக்கு இலங்கை அரசின் சார்பாகவும் மக்களின் சார்பாகவும் இந்தியாவுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நன்றி தெரிவித்தார்.


SUBRA - 14
சித்தன்கேணி
பேச்சு சிங்களம்
உத்தியோகத்தர்களுக்கானது.
★ சரளமாக பேச, எழுத, வாசிக்க
★ 40 மணிநேர வகுப்பு மட்டும்
★ பயிற்சி நெறிக்கான கட்டணம் ரூபா 750 மட்டும்.
sat.,sun. 6-8 p.m.
ஆரம்பம் : 24.05.2003
சனி மாலை 6.00

NEW SCIENCE CENTRE
யாழ்.நகர்.
A/L 2004
PHYSICAL CHEMISTRY
sat.,sun. ⇒ 12 - 1
ORGANIC
பிரிவு I sat., sun. ⇒ 10 - 11 a.m.
பிரிவு II sat., sun. ⇒ 2 - 3 p.m.
Paper class
sat., sun. 7-8 a.m. (28000)
By : அன்பழகன்


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
13 - 12 - 1936



விண்ணில்
22 - 04 - 2003

காரைநகர், களபூமி, திக்கரையைச் சேர்ந்தவரும்,
ஓய்வுபெற்ற உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தருமாகிய

### அமரர் கணபதிப்பிள்ளை சபாரத்தினம்

*எங்கள் அன்பு அப்பாவே!*
*அன்பு என்னும் சொல்லுக்கே வாழ்வில் உயிர் கொடுத்தீர்கள்!*
*ஆனால், காலன் என்னும் கொடியவன் - உங்கள் உயிரை எடுத்தானே!*
*எம் வீட்டின் ஒளிவிளக்கு இன்று ஒளி இழந்து தவிக்கின்றது.*
*நாள்கள் முப்பத்தொன்று நகர்ந்தாலும் - உங்கள் திருமுகம் நகராது*

*எம் மனங்களிலிருந்து....*

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் சபிண்டீகரண நிகழ்வும் இன்று (22. 05. 2003) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும்.

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
மனைவி, பிள்ளைகள்.

*126/12, அரசடி வீதி,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (18251)

## புத்தளத்துக்கு நியமனமான ஆசிரியர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,மே22

யாழ்.மாவட்டத்திலிருந்து அண்மையில் புத்தளம் மாவட்ட பாடசாலைகளுக்கு புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் புத்தளம் மாவட்ட தலைவர் கே.எஸ்.சிவகுமாரன் தமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுள்ளார்.

ஆசிரியர்கள் தமது தங்குமிட வசதிகள் மற்றும் ஏனைய நலன்புரி வழிகாட்டல் தொடர்பான 'தகவல்களைத் தம்முடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளமுடியும் என்றும் - தொடர்புகளுக்கு இல:-13/1, சேவிஸ் றோட், புத்தளம் என்ற முகவரியை அல்லது 66927,66740 என்ற தொலைபேசி இலக்கங்களைப் பயன்படுத்துமாறும் அவர் கேட்டுள்ளார். (எ-6)

## அதிபர் பதவிகளுக்கு நேர்முகப் பரீட்சை

நவாலி மகாவித்தியாலயம், அராலி சரஸ்வதி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் காலியாக உள்ள அதிபர் பதவிக்கு பொருத்தமானவர்களைத் தெரிந்தெடுப்பதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் திங்கட் கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு வலிகாமம் கல்வி வலய அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வதிபர் பதவிகளுக்கு விண்ணப்பித்தவர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அழைப்புக் கடிதங்கள் வலிகாமம் வலயக் கரியாலயத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஓ-152)

## மட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பவர் காயமடைந்தார். அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மட்டு வண்ணியனார் வீதியில் உள்ள ரெலோ இயக்க செயலாளர் பிரசன்னாவின் கடையின் மீது இனந்தெரியாதவர்களினால் கைக்குண்டு வீச்சு மேற்கொள்ளப்பட்டது. எனினும் கைக்குண்டு வெடிக்காததனால் சேதம் எதுவும் ஏற்படவில்லை. (ம)

## லண்டனில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உட்கொண்டு லண்டனிலேயே தங்கியிருந்து ஓய்வெடுத்தார். தற்போது அவர் பூரண சுகமடைந்துவிட்டார் என அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

'சமாதான முயற்சிகளில் இருந்து மதியுரைஞர் பாலசிங்கத்தை தலைவர் பிரபாகரன் ஒதுக்கிவிட்டார்' என்ற சாரப்பட வெளியான செய்திகளை அடியோடு நிராகரித்த அந்த வட்டாரங்கள் அத்தகைய செய்திகள் பரிகாசத்துக்குரியவை என்றும் குறிப்பிட்டன.


SUBRA சித்தன்கேணி
2005 A/L புதிய பிரிவு
ஆரம்பம்: 22.05.2003
வியாழன் பி.ப. 4.00
★இதுவே இறுதிப்பிரிவாகும்.
★ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். (C/27968)

விக்னா
கல்வி நிறுவனம்
பிரிவு 6
O/L DAY CLASS
(08.30-2.00)
இறுதிப் பிரிவு
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

எமது புதிய வீடியோ CD வெளியீடு
மாதவன்,ஷாம்,விவேக்
லேசா லேசா
வீடியோ விமல்
(18984) யாழ்ப்பாணம்.

எமது இன்றைய புதிய வீடியோ CD வெளியீடு
லேசா லேசா
பிரதிகள்
உடன் பெற்றுக்கொள்ளலாம். (C/28024)
சோலை வீடியோ விஷன்
பிரதான வீதி, நெல்லியடி.


## இடைக்கால....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

உடனடி மனிதாபிமான புனர்வாழ்வு தேவைகளுக்கான சிரான் உப குழுவினால் அதன் வரையறுக்கப்பட்ட அதிகாரங்களுடன் பாரிய அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளமுடியாது.

இப்போது நீங்கள் குறிப்பிடும் வடக்கு - கிழக்கு அபிவிருத்தி புனரமைப்பு கவுன்ஸிலானது விரிவுபடுத்தப்பட்ட 'சிரான்' உபகுழுதான் வேறு ஒன்றுமில்லை.

தவிரவும், ஜப்பானின் டோக்கியோவில் கூட இருக்கும் உதவும் நாடுகளுடன் கலந்து ஆலோசித்த பின்னர் அரசும் புலிகளும் கலந்து பேசி இந்தக் கவுன்ஸிலை நிறுவவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கின்றீர்கள். இந்தக்கவுன்ஸில் சர்வதேச சமூகத்தின் வழிகாட்டலிலும் அங்கீகாரத்துடனும்தான் இயங்கவேண்டி இருக்கும்.

எங்கள் தலைவர் பிரபாகரன், உங்களுடைய வெளிநாட்டு அமைச்சரிடம் எடுத்துக்கூறிய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கு, எவ்வளவோ குறைவானது இது. 'சிரான்' உப குழுவை கொள்கை வகுப்புச்சபை, திட்டக்குழு, பிரதமரிடம் இருந்து அதிகாரத்தைப் பெறும் நிர்வாக அமைப்பு ஆகிய மூன்றையும் கொண்ட ஒரு கட்டமைப்பாக்கும் யோசனையையும் தெரிவித்திருக்கிறீர்கள். இவற்றில் முதல் இரண்டு அமைப்புகளிலும் புலிகள் சமபங்கு வகிப்பார்கள்.

மூன்றாவதான நிர்வாக அமைப்பில் ஆரம்பக் கட்டமாக வடக்கு-கிழக்கில் வசிக்கும் தமிழர்களே பணிக்கு அமர்த்தப்படுவார்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதன் அர்த்தம் நிர்வாக அமைப்பில் புலிகளின் அரசியல் பிரதிநிதிகள் எந்த விதமான பங்களிப்பையும் செய்யமுடியாது என்பதாகும்.

மொத்தத்தில் 'அபிவிருத்தி மற்றும் புனரமைப்புக் கவுன்ஸில்' நாடாளுமன்ற சட்ட திட்டங்களுக்கு அமைவாக இயங்கும். எல்லாவற்றுக்கும் மேலாக இந்த கவுன்ஸிலை உருவாக்குவது பற்றிய இறுதித் தீமானத்தை எடுக்கும் பொறுப்பு உதவி வழங்கும் நாடுகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை நீங்களாக வகுத்தீர்களோ அல்லது அரசாங்கம் தயரித்து தந்ததைக்கொண்டு வந்தீர்களோ தெரியவில்லை.

உள்ளூராட்சி மன்றங்கள் மூலமாகவும் வடக்கு-கிழக்கு அபிவிருத்திப் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ளலாம் என்றும் ஆலோசனை கூறியிருக்கிறீர்கள். உள்ளூராட்சி மன்றங்களால் இந்தப் பாரிய பொறுப்பை நிறைவேற்ற முடியுமா? அரசியல் சுதந்திரத்திற்காகவும் நாட்டிற்காகவும் நாம் விடுதலைப்போர் புரிந்தது. கேவலம், அதிகாரமற்ற கிராம சபைகளை பெறுவதற்காகவே என்று தமிழ் மக்கள் எங்களை எள்ளிநகையாடமாட்டார்களா?

புலிகளின் கணிசமான பங்களிப்புடன்கூடிய வலுவான இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பே எமக்குத் தேவை.

இதுதான் தலைவர் பிரபாகரனுடைய நிலைப்பாடு

தயவுசெய்து இதைப் பிரதமரிடம் சொல்லி இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்துமாறு அவரைத் தூண்டுங்கள். அவர் இணங்கி அதற்கு நடவடிக்கை எடுத்தால் சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்வது பற்றியும் ஜப்பானில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் பங்குபற்றுவது குறித்து நாம் முடிவுசெய்வோம்.

- இப்படி அன்ரன் பாலசிங்கம் தனது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார். (ம)

*(கடிதத்தின் முழு விவரம் 3ஆம் பக்கத்தில்)*

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை பரணீதரன்

(யாழ் மத்திய கல்லூரி, 2004 வர்த்தகப் பிரிவு மாணவன்)

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த செல்லத்துரை பரணதரன் 20-05-2003 அன்று அகாலமரணமானார்.

அன்னார் செல்லத்துரை - லலிதாராணி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் நிசாதரன்(கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), நிரோதரன் (கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாசாலை), கிரிதரன்(கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாசாலை) ஆகியோரின் பாசமிகு அண்ணனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23-05-2003) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சிவியரன் காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*நீர்வேலி வடக்கு.* (C/28026) வே.செல்லத்துரை(தகப்பன்)

## S.கென்றி செல்வராஜா

(இளைப்பாறிய ஊழியர், Distric Evangelist)

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் தற்போது புத்தூரை வசிப்பிடமாகவும் கொண்ட S.கென்றி செல்வராஜா அவர்கள் நேற்று (21.05.2003) புதன் கிழமை காலமானார்.

அன்னார் மேரிகனகம்மாவின் அன்புக் கணவரும் ஜெயராணி, மலர் (சிசிலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜீவானந்தகுமாரின் அன்பு மாமனாரும் ஜேமஸ் சுசன்னாவின் பேரனுமாவார்

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (22.05.2003) வியாழக் கிழமை பி.ப 3.00 மணியளவில் புத்தூர் மெதடிஸ்ற் மிஷன் வளாகத்தில் நடைபெற்றுப் பின்னர் பூதவுடல் நல்லடக்கத்திற்காக கொட்டடி சேமக் காலைக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*மெதடிஸ்ற் மிஷன்*
*புத்தூர்* (18286) ஜீவா(மருமகன்)

## திருமதி
## நடராஜாகுருக்கள் வாலாம்பிகை அம்மா

கெருடாவிலைப் பிறப்பிடமாகவும் வண்ணை வீரமாகாளி அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராஜாகுருக்கள் வாலாம்பிகை அம்மா நேற்று (21.05.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜாகுருக்களின் அன்பு மனைவியும் சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக்குருக்களின்(கெருடாவில் கந்தசுவாமி கோயில்) சகோதரியும் அமரர் சிவஸ்ரீ சிவசுப்பிரமணிய குருக்கள், சண்முகரட்ணம் ஐயர், அமரர் சிவஸ்ரீ முத்துக்குமார சுவாமி குருக்கள், ரோசாமலர், விசாகரட்ணம் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவஸ்ரீ இராஜேந்திரகுருக்கள் (முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் திருநெல்வேலி), சிவபாக்கியம், ஜெயம், ஞானம் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுரேஸ் (கனடா), றமேஸ் (கனடா), குணேஸ் (கனடா), நரேன்(ஆஸ்திரேலியா), கமல்ராஜ் ஐயா (வீரமாகாளி அம்மன் கோயில் தேவஸ்தானம்), இந்திரா, சிந்துஜா, கிருஸ்ணவேணி, கிருசாந், பிரசாந், மயூரா, நிசாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கபில், மனோஜ், பிரவின் கஷ்ரிகா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அவரின் இல்லத்தில் இருந்து இன்று(22.05.2003) வியாழக்கிழமை 3மணியளவில் இறுதிக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு, எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சண்முகரட்ணம் ஐயர் (மகின்-நரேன் வீடியோ),
(C/28027) சி.இராஜேந்திரக்குருக்கள் (மருமகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22.05.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.